இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்
PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No./159/News/2019. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 143 | இதழ் : 11 | திகதி : 23.06.2019 | விலை : 30.00

## "தூய ஆவியின் அருட்பொழிவுடன் புனித அந்தோனியார் மறையுரைத்தார்"

### சுவிஸ் ஆன்மீகப் பணியக வெள்ளிவிழாத் திருப்பலியில் யாழ் ஆயர்



சுவிஸ் நாட்டின் தமிழ் ஆன்மீகப் பணியகம் ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகளின் நிறைவில் பணியக வெள்ளிவிழா கடந்த 09.06.2019 அன்று பி.ப 3.00 மணியளவில் கொண்டாடப் பட்டது. பாசல் நகரில் அமைந்துள்ள புனித அந்தோனியாரின் திருநாளுடன் கொண்டாடப் பட்ட வெள்ளி விழாவில் தலைமையேற்றுத் திருப்பலி ஒப்புக் கொடுத்த யாழ் ஆயர் அருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகை அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு அவை தூய ஆவியான வரின் பெருவிழாவைக் கொண் டாடிய அதே நாளில் அதனோடு இணைந்து பணியகப் பெருவிழா கொண்டாடப்பட்டது. "புனித அந்தோனியார் தூய ஆவி யினால் முற்றிலும் வழிநடத்தப் பட்டு இறை திருவுளத்திற்குக் கட்டுப்பட்டு விவிலிய தாகம் கொண்டு மறை போதகமாற்றி நற்கருணை வாழ்வு வாழ்ந்து ஏழைகள்பால் கரிசனை யோடு இருந்து அவர்க ளுக்கு உதவி புரிந்து சீடத் துவத்திற்கு சான்று பகர்ந் தார்" என்று தனது மறை யுரையில் குறிப்பிட்டார்.

இத்திருவிழா சுவிஸ் ஆன்மீகப் பணியக இயக் குனர் அருட்பணி சு. டக்ளஸ் மில்ரன் லோகு அடிகளாரின் வழிநடத்து தலில் பாசல் பணியக இறை மக்களோடும் சுவி சின் பல்வேறு பகுதிகளி லிருந்து திரண்டு வந்த ஏரா ளமான தமிழ் கத்தோலிக்க மக்களோடும் இணைந்து கொண்டாடப்பட்டது. நிறை வில் திச்சுரூப ஆசீர் இடம் பெற்றது. புலம்பெயர் கத் தோலிக்க தமிழ் மக்களின் ஆன்மீகத் தேவைகளில் இப்பணியகத்தின் சேவை கடந்த 25 ஆண்டுகளாக மேன்மைமிக்கதே.

## கத்தோலிக்க ஆயர் பேரவையில் யாழ் ஆயரின் நியமனங்கள்



இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் உப தலைவராக யாழ் ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் நியமனம் பெற்றுள்ளார். அத்துடன் ஆயர் பேரவையில் நீதி, சமாதானம், மனித முன்னேற்றப் பணிகளுக்கான தேசிய ஆணைக்குழுவின் தலைவராகவும் யாழ் ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் நியமனம் பெற்றுள்ளார். புதிய பொறுப்புக்களைப் பணியேற்கும் ஆயர் அவர்களைப் பாதுகாவலன் வாசகர் நெஞ்சங்கள் சார்பாக நெஞ்சார வாழ்த்தி மகிழ்கின்றோம்.

## மடு ஆடித் திருநாள் வழமைபோல்

இவ்வாண்டு மடு ஆடித்திருநாள் வழமைபோல யூலை 2ம் திகதி கொண்டாடப்படுமென மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் பாதுகாவலனுக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையிலும் பாதுகாப்பை உறுதிப்படுத்தி வழமைபோல் யூன் 23ம் திகதி கொடியேற்றத்துடன் நவநாட்கள் ஆரம்பமாகும் எனவும் ஆடி 1ம் திகதி மாலை நற்கருணை விழாவும் ஆடி 2ம் திகதி காலை திருவிழாத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

மடுப்பிரதேசத்தின் பாதுகாப்பு இந்நாட்களில் உறுதிப்படுத்தப் பட்டிருப்பதால் யாத்திரிகர்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மன்னார் ஆயர் வேண்டி நிற்கின்றார்.

## அளம்பில் புனித அந்தோனியார் ஆலயத் திறப்புவிழா



01.06.2019 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு புதிதாக நிர்மாணிக் கப்பட்ட அளம்பில் புனித அந்தோனியார் ஆலயத் திறப்பு விழா அளம்பில் பங்குத் தந்தை அருட்பணி M.L. தயாகரன் அவர்களின் நெறிப்படுத்தலில் யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. (தொடர்ச்சி 2ம் பக்கம்)

## புனித யோசவ் வாஸ் இறையியல் கல்லூரியின் பட்டமளிப்பு விழா - 2019



உரோம் ஊர்பானியா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட யாழ். புனித யோசவ் வாஸ் இறையியல் கல்லூரியின் மூன்றாவது பட்டமளிப்பு விழா கடந்தவாரம் கொழும்பில் நடைபெற்றது கொழும்புப் பேராயர் கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் நடைபெற்ற இப் பட்ட மளிப்பு விழாவில் யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த 13 மாணவர்கள் இறையியலில் இளமானிப் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டனர். இவர்களுடன் இக் கல்லூரியிலிருந்து பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கை 35 ஆக உயர்ந்துள்ளது. புதிய பட்டதாரிகளையும் இவ் இறையியல் கல்லூரியின் அதிபர் அருட்பணி. ம.வி.இ. இரவிச்சந்திரன் அடிகளாரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

## பொறுமையும், கூடிய சக்தியும் இருந்தாலே சமாதானத்தைக் கட்டியெழுப்பலாம்

### ஜேர்மன் -இலங்கை சமூக சமாதானப் பணியாளர் போசனா



கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் "சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தின் முக்கியத்துவம்" பற்றிய கருத்தமர்வு நிறுவன இயக்குனர் அருட்தந்தை ச.இயூஜின் பிரான்சிஸ் அவர்கள் தலைமையில் யாழ் மாவட்ட இளையோ ருக்கான விழிப்பூட்டல் கருத்தமர்வு கியூடெக் கரித்தாஸ் மண்டபத்தில் 12.06.2019 அன்று நடைபெற்றது.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக ஜேர்மன் இலங்கை சமாதானப் பணிகளின் இணைப்பாளரான போசனா அவர்களும் வளவாளராக ஈ.சொவ்ட் நிறுவன மனிதவள முகாமையாளரான செ.அரவிந்தன் தேவராஜன் அவர்களும் கலந்து கொண்டு கிறிஸ்தவ, இந்து, முஸ்லிம் இளையோரை நெறிப்படுத்தினர். (தொடர்ச்சி 11ம் பக்கம்)

## பண்டத்தரிப்பு மருத்துவமனையில் சிற்றாலயம்



யாழ். பண்டத்தரிப்பு காடாப்புலவு மருத்துவ மனையில் உள்ள அன்னை வேளாங்கன்னி சிற்றாலயம் புனரமைக்கப்பட்டு 15.06.2019 சனிக்கிழமை காலை 7. 00 மணியளவில் யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் ஆசீர்வதிக் கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டதுடன் திருப் லியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதில் மறைக் கோட்ட முதல்வர் அருட்பணி M.ஜேசுரட்ணம் அடிகளாரும், மறைக்கோட்ட அருட்தந்தை யர்கள், அருட்சகோதரிகள் உட்பட மாதகல் இறைமக்கள், வேறு மதபக்தர்களும் காடாப் புலவு மருத்துவமனையின் மருத்துவ வைத்திய கலாநிதி A.சுஜந்தன் மருத்துவமனைப் பணி யாளர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

## எமது எண்ணம்

### மோடி சொல்வதைக் கேட்பதைவிட டில்லிக்கு என்ன கூற வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் சந்தர்ப்பம்

முப்பது ஆண்டுகால ஆயுதப் போராட்டத்தை இல்லா தொழிக்க உதவியளித்த அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளின், ஈழத் தமிழர் தொடர்பான நிலைப்பாட்டைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, இருக்கின்ற 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழான மாகாண சபைகள் அப்படியே கைவிடப்படக் கூடிய ஏது நிலை காணப்படுகின்றது. எனவே பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று புதுடில்லிக்குச் செல்வதற்கு முன்னர் வடக்கு - கிழக்கு இணைந்த தன்னாட்சி அதிகாரங்களும் தேசத்துக்கான அங்கீகாரத்தையும் பெறக் கூடிய இறுக்கமான வழிமுறைகளை முன்வைக்கக் கூடிய கலந்துரையாடல்களில் தமிழ்த் தரப்பு ஈடுபட வேண்டியது அவசியமாகும்.

தமிழர் தேச அங்கீகாரம், சுயாட்சி என்பது தமிழரசுக் கட்சியின் கோரிக்கை. 1951 ஆம் ஆண்டு திருகோணமலைப் பிரகடனத்தில் அது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. எனவே அந்த அடிப்படையின் கீழ் டில்லிக்குச் செல்ல முன்னர் அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் அழைத்துப் பேச வேண்டியது சம்பந்தனின் கடமை. 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலில், இலங்கையில் ஏற்பட்டுள்ள பூகோள அரசியலின் தாக்கம் இந்தியாவுக்கும் மெதுவான எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது. குறிப்பாக இந்துமா சமுத்திரத்தில் இந்தியாவுக்கு எந்தளவு முக்கியத்துவத்தை அமெரிக்கா கொடுத்துள்ளதோ அதேயளவு முக்கியத்துவம் இலங்கைக்கும் வழங்கப்பட வேண்டுமென்பது சிங்கள ஆட்சியாளர்களின் எதிர்பார்ப்பும் நம்பிக்கையும்.

இலங்கையின் இந்த அணுகுமுறைதான், இந்திய மத்திய அரசுக்கும் தற்போது பிரச்சினையாகவுள்ளது. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், அரசியல் இராணுவ விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் கிளார்க் கூப்பர் கொழும்புக்கு வந்து சென்றதையும் பிரதமர் நரேந்திர மோடி அரசு சந்தேகமாகவே பார்க்கிறது. இந்தியாவைத் தாண்டி அமெரிக்காவை தங்கள் பக்கம் நேரடியாக ஈர்ப்பதற்காகவே சீனாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்வதற்கான தயார்ப்படுத்தல் உடன்படிக்கை ஒன்றை மைத்திரிபால சிறி சேன, சீன ஜனாதிபதி சீ ஜின்பிங்குடன் கடந்த மாதம் 14 ஆம் திகதி பீஜிங்கில் கைச்சாத்திட்டிருந்தார்.

ஆனாலும் சீனாவைப் பகைத்துக் கொள்ளாமல் இந்தியாவைத் தாண்டி அமெரிக்காவுடனான நேரடி உறவுக்கு சிங்கள ஆட்சியாளர்கள் முற்படுகின்றனர் என்பதையே இந்த நகர்வுகள் கோடிட்டுக் காட்டுகின்றன. இலங்கையின் இந்த நகர்வுகளுக்கான எச்சரிக்கையாகவே பிரதமர் மோடியின் கொழும்பு வருகையும் அமைந்திருந்தது. எனவே இவ்வாறான பூகோள அரசியல் போட்டிகளுக்கு மத்தியில் தமிழ்த் தரப்பும் தங்கள் நியாயத்தை வலியுறுத்திப் பேரம்பேச வேண்டிய தருணம் இது. அரபுநாடுகளில் கட்டார் சிறிய நாடாக இருந்தாலும் பிராந்தியத்தில் அதன் முக்கியத்துவம் அதிகமாகும். ஆசியாவில் சிங்கப்பூர் சிறியநாடாக இருந்தாலும் பொருளாதாரத்தைத் தீர்மானிக்கும் சக்தியாகவுள்ளது. அவ்வாறே இலங்கையும் பிராந்தியத்தில் சிறிய நாடாக இருந்தாலும் தனித்துவம் மிக்க நாடாக விளங்க வேண்டும் என்பதில் சிங்கள ஆட்சியாளர்கள் குறியாகவே இருக்கின்றனர்.

குறைந்தபட்சம் தென் இந்தியாவிற்குள்ளேனும் இலங்கை முக்கியத்துவம் மிக்க சிங்கள பௌத்த நாடாக இருக்க வேண்டுமென்பது சிங்கள ஆட்சியாளர்களின் தற்போதைய வியூகமாகவுள்ளது. இலங்கையின் தற்போதைய இந்த வியூகம், இந்திய மத்திய அரசுக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே எழுபது ஆண்டுகள் அரசியல் போராட்டம் நடத்திய தமிழ்த் தரப்பு, தமிழர் தாயகத்துக் கான முக்கியத்துவத்தையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தி இடித்துரைத்தால், குறைந்த பட்சம் தனது பிராந்திய நலனுக்காகவேணும் இந்திய அரசு விரும்பியோ விரும்பாமலோ அதனைப் பரிசீலிக்கக் கூடும். இலங்கைத்தீவில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக்கு வழங்கப்படுகின்ற அங்கீகாரமே அமெரிக்கா போன்ற மேற்குலகத்திற்கும் இந்தியா போன்ற நாடுகளுக்கும், இந்தோ- பசுபிக் பிராந்தியத்தில் தங்கள் நலன்களை முன்னெடுக்க வசதியாக இருக்கும் என்ற செய்தியை தமிழ்த் தரப்பு வெளிப்படுத்த வேண்டிய இறுதிச் சந்தர்ப்பமாகும்.

டில்லிக்குச் செல்ல முன்னர் ஏனைய தமிழ்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து இந்தியாவுக்கு என்ன சொல்ல வேண்டும் என்பது தொடர்பாக ஒருமித்த குரலாக அறிக்கை வெளியிட வேண்டும். ஒற்றையாட்சியின் கீழ் 13 ஆவது திருத்தச் சட்டம் இருப்பது போலல்லாது வடக்குக் கிழக்கு இணைந்த சுயாட்சியே இறுதித் தீர்வு என்ற கருத்தை இடித்துரைக்க வேண்டும். இலங்கையின் மேலாதிக்கத்தால் சினம் கொண்டுள்ள இந்தியாவுக்கு இம்முறை இந்தக் கோரிக்கை சாதகமாகவும் அமையலாம்.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

# அனைத்து மதத்தவரும் எருசலேமின் அமைதிக்காக செபிக்கின்றனர்

புனித பூமியின் இதயமாக அமைந்துள்ள, அமைதியின்நகரமாகியஎருசலேமின்அமைதிக்காக, ஒரே கடவுள் கொள்கையைக் கொண்ட மூன்று மதங்களைச் சார்ந்த விசுவாசிகளும் செபித்து வருகின்றனர் என்று, திருப்பீட உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

இஸ்ரேலுக்கும், திருப்பீடத்திற்கும் இடையே தூதரக உறவுகள் உருவானதன் 25ம் ஆண்டு நிறைவு, நியூயார்க் நகரின் Fordham பல்கலைக் கழகத்தில் சிறப்பிக்கப்பட்ட நிகழ்வில் யூன் 19, உரையாற்றிய, ஐ.நா. தலைமையகத்தில், திருப்பீடத்தின் பிரதிநிதியாகப் பணியாற்றும் பேராயர் பெர்னார்தித்தோ அவுசா அவர்கள், இவ்வாறு கூறினார்.

இந்தப் பூமியில் அமைதிக்காகச் செபிப்பதற்கு ஓரிடம் இருக்கின்றதென்றால் அது எருசலேம் என்றும், உலகின் அனைத்து விசுவாசிகளும், எருசலேமில் அமைதி நிலவ வேண்டுமென்றே செபிக்கின்றனர் என்றும் கூறினார் பேராயர் அவுசா.

இஸ்ரேலுக்கும், திருப்பீடத்திற்கும் இடையேயுள்ள உறவுகளில், கடந்த 25 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் சவால்கள் பற்றி உரையாற்றிய பேராயர் அவுசா அவர்கள், இவ்விரு நாடுகளுக்கிடையே நிலவ வேண்டிய தூதரக உறவுகளின் சிறப்புப் பண்புகள் பற்றியும் சுட்டிக்காட்டினார். ஒவ்வொரு மனிதரின் மாண்பும், அடிப்படை உரிமைகளும் மதிக்கப்படவும், பாதுகாக்கப்படவும், எல்லா விதமான சமய சகிப்பற்றதன்மைக்கெதிராய்ச் செயல்படவும், இவ்விரு நாடுகளும் இணைந்து உழைப்பதற்கு அழைக்கப்படுகின்றன என்றுரைத்த பேராயர் அவுசா அவர்கள், திருப்பீடம் இஸ்ரேலுடன் இணைந்து கடந்த 25 ஆண்டுகளில், யூத விரோதப்போக்கிற்கு எதிராய்க் கடுமையாய் உழைத்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

திருப்பீடம் 183 நாடுகளுடன் தூதரக உறவுகளைக் கொண்டுள்ளது. அதில் இஸ்ரேல் 163வது நாடாக இணைந்தது. இந்த உறவுகள் மேலும் பல்லாண்டுகள் தளைக்க வேண்டுமென்ற வாழ்த்துக்களுடன், இவ்வுரையை நிறைவு செய்தார், பேராயர் பெர்னார்தித்தோ அவுசா.

1993ம் ஆண்டு டிசம்பர் 30ம் தேதி, இஸ்ரேலுக்கும், திருப்பீடத்திற்கும் இடையே தூதரக உறவுகள் கையெழுத்திடப்பட்டன. இவை, 1994ம் ஆண்டு மார்ச் 10ம் தேதி அமலுக்கு வந்தன.

# அளம்பில் புனித அந்தோனியார் ஆலயத் ....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந் நிகழ்வுகளின் ஆரம்பத்தில் ஆலய முன்வீதி வழியாக பான்ட் வாத்திய இசையுடன் ஆயர் அவர்கள் ஆலயத்திற்கு அழைத்துவரப்பட்டார். தொடர்ந்து ஆயர் அவர்கள் புதிய ஆலயத்தை ஆசீர்வதித்துத் திறந்து வைத்து பங்குமக்கள், குருக்களுடன் சேர்ந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தார். திருப்பலியைத் தொடர்ந்து ஆலயக் கட்டுமானப் பணியில் ஈடுபட்டு உழைத்தவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது. இவ்வாலயத்திற்கான அடிக்கல் 29.8.2005 அன்று அப்போதைய பங்குத்தந்தை அருட்திரு யூட் அமலதாஸ் அடிகளாரின் காலத்தில் ஓய்வு நிலை ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் நாட்டப்பட்டு கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு 15 வருடங்களின் நிறைவில் தற்போதைய பங்குத்தந்தையாகவுள்ள அருட்பணி தயாகரன் அவர்களினதும் பங்கு மக்களினதும் கடின உழைப்பினாலும் விடாமுயற்சியினாலும் ஆலயம் புதுப் பொலிவுடன் வழிபாடுகளுக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

# திருவிவிலிய மறைக்கோட்ட....

(12ம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறை மறைக்கோட்டத்தில் கட்டைக்காடு, தாளையடி, புலோப்பளை, சாவகச்சேரி ஆகிய பங்குகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கான பரீட்சை மிருசுவில் றோ.க பாடசாலையிலும் ஏனைய பங்குகளைச சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கு பருத்தித்துறை சென். தோமஸ் மகளிர் வித்தியாலயத்திலும் நடைபெறும். அதேபோன்று கிளிநொச்சி மறைக்கோட்டத்தைச் சேர்ந்த வலைப்பாடு, முழுங்காவில், குமுழமுனை, பூநகரி ஆகிய பங்குகளைச சேர்ந்த மாணவ மாணவிகளுக்கான பரீட்சை முழுங்காவில் தேசிய பாடசாலையிலும் ஏனைய பங்குகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கான பரீட்சை கிளிநொச்சி புனித திரேசாள் பெண்கள் பாடசாலையிலும் இடம்பெறும்.

திருவிவிலிய அறிவுப்போட்டி காலை 10.00 மணிமுதல் 12.00 மணிவரையும் தொடர்ந்து பேச்சுப் போட்டியும் இடம்பெறும். இப்பரீட்சையில் தோற்றவிருக்கும் மாணவ, மாணவிகள் தங்கள் பங்குத் தந்தையர்களை சந்தித்துத் தங்களுக்குரிய பரீட்சைச் சுட்டிலக்கங்களை பெற்றுக்கொள்ளு மாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்

| மறைக்கோட்டம் | பரீட்சை நடைபெற உள்ள இடம் |
|---|---|
| யாழ்ப்பாணம் | யா/சென் ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம் |
| தீவகம் | ஊர்காவற்றுறை சென் மேரீஸ் வித்தியாலயம் |
| இளவாலை | ஹென்றி அரசர் கல்லூரி |
| பருத்தித்துறை | i. சென் தோமஸ் மகளிர் வித்தியாலயம்<br>ii. மிருசுவில் றோ.க பாடசாலை |
| கிளிநொச்சி | i. கிளி/ சென் திரேசா பெண்கள் பாடசாலை<br>ii. முழுங்காவில் தேசிய பாடசாலை |
| முல்லைத்தீவு | மு/ மகாவித்தியாலயம் |

## சிந்திக்க ஓர் சித்திரம்




நம்பிக்கைக் கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர், எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர்.

திப 2:44

## துயர் பகிர்கின்றோம்

செபமாலைத்தாசர் சபையைச் சேர்ந்த **அருட்பணி ஜெயசீலன்** அடிகளாரின் அன்புத் தாயார் **மேரி யோசப்பின் அமிர்தநாதர்** அவர்கள் ஆனி மாதம் 14ம் திகதி சில்லாலையில் காலமானார். அன்னாரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற மன்றாடுவதுடன் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

செபமாலைத்தாசர் சபையைச் சேர்ந்த **அருட்பணி மரிசுதன்** அடிகளாரின் அன்புத் தந்தையார் **திரு.மரியதாஸ்** அவர்கள் ஆனி மாதம் 21ம் திகதி நாவாந்துறையில் காலமானார்.

அன்னாரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற மன்றாடுவதுடன் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும் அவரது குடும்பத்தி னருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# கத்தோலிக்க ஆயர்கள் நியமனம் - இலங்கை ஆயர் பேரவை : 2019 - 2022

**தலைவர்**
மேதகு. J. வின்ஸ்டன் S. பர்னாந்து SSS ஆண்டகை

**உபதலைவர்**
மேதகு. யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை

**செயலாளர்**
மேதகு. J.D. அந்தனி ஆண்டகை

**நிரந்தர உறுப்பினர்**
மேதகு. J. வின்ஸ்டன் S. பர்னாந்து SSS ஆண்டகை
மேதகு. யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை
மேதகு. J.D. அன்ரனி ஆண்டகை
அதிமேதகு. கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை
மேதகு. நோபட் M அந்திராடி (OMI) ஆண்டகை
மேதகு. ரேமன் விக்ரமசிங்க ஆண்டகை

**நிதித்துறை ஆணைக்குழு**
மேதகு ஹெரல்ட் அன்ரனி பெரேரா ஆண்டகை (தலைவர்)
மேத D. வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை (உப தலைவர்)
மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை (உப தலைவர்)

**உதவிச்செயலாளர்- கத்தோலிக்க ஆயர் பேரவை**
அருட்பணி. டோனி மார்ட்டீன்

**கல்வி, மறைக்கல்வி, விவிலியப் பணிகளுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு. D. வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை (தலைவர்)
மேதகு. ஜோசப் பொன்னையா ஆண்டகை (உபதலைவர்)

**நீதி, சமாதானம், மனித முன்னேற்றப் பணிகளுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை (தலைவர்)
மேதகு. மெக்ஸ்வல் கிறன்வில் சில்வா (உபதலைவர்)

**புலம்பெயர்ந்தோர், உடல்நலம், சுற்றுலா, சிறைச்சாலைப் பணிகளுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு.ரேமன் விக்ரமசிங்க ஆண்டகை (தலைவர்)
மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை (உப தலைவர்)

**மத உரையாடல், உறவுகளுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு. நோபட் M அந்திராடி (OMI) ஆண்டகை (தலைவர்)
மேதகு. ஜோசப் பொன்னையா ஆண்டகை (உபதலைவர்)

**சமூக தொடர்பாடலுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு. மெக்ஸ்வல் கிறன்வில் சில்வா (தலைவர்)
மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை (உப தலைவர்)

**துறவற, உலக சபைகள், குருக்கள், குருமாணவர்களுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு. J. வின்ஸ்டன் S. பர்னாந்து SSS ஆண்டகை (தலைவர்)
மேதகு. D. வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை (உபதலைவர்)
மேதகு. யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை (உபதலைவர்)

**மறைபரப்புப் பணிக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு ஹெரல்ட் அன்ரனி பெரேரா ஆண்டகை (தலைவர்)
மேதகு. ஜோசப் பொன்னையா ஆண்டகை (உப தலைவர்)

**திருவழிபாடு, கலாசாரப் பணிகளுக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு. கிளிட்டஸ் C பெரேரா (O.S.B) ஆண்டகை (தலைவர்)
மேதகு. F. லயனல் இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை (உபதலைவர்)

**பொது நிலையினருக்கான தேசிய ஆணைக்குழு**
மேதகு. ரேமன் விக்ரமசிங்க ஆண்டகை (தலைவர்)
மேதகு ஹெரல்ட் அன்ரனி பெரேரா ஆண்டகை (உபதலைவர்)
மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை (உப தலைவர்)

**பொது மக்கள் தொடர்பு**
அதிமேதகு. கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை

**ஒழுக்கவியல், திருச்சபைச் சட்ட ஆலோசகர்**
அதிமேதகு. கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை (தலைவர்)
மேதகு.D. வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை (உபதலைவர்)
மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை (உபதலைவர்)
மேதகு. ஜோசப் பொன்னையா ஆண்டகை (உபதலைவர்)

**மிசியோ புலமைப்பரீட்சை கல்விக்கான அமைப்பு**
மேதகு ஹெரல்ட் அன்ரனி பெரேரா ஆண்டகை (தலைவர்)
மேதகு. F. லயனஸ் இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை (உபதலைவர்)

**இலக்குக் கல்விக்கான ஆயர் அமைப்பு**
மேதகு. J.D. அன்ரனி ஆண்டகை (தலைவர்)
அருட்பணி டோனி மார்ட்டீன் அடிகளார் (நடுவர்)

**யோசவாஸ் செயலகம்**
மேதகு வியானி பர்னாந்து ஆண்டகை -கண்டி (தலைவர்)

**யோசவாஸ் நிதியம்**
அதிமேதகு. கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை (தலைவர்)

**லயனல் B. இம்மானுவேல் அறக்கட்டளை நிதியம்**
மேதகு ஹெரல்ட் அன்ரனி பெரேரா ஆண்டகை(தலைவர்)
மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை (உபதலைவர்)

## தேசிய இயக்குனர்கள் மற்றும் அருட்தந்தையர்கள் நியமனம் 2019 - 2022

**1. மறைக்கல்வி, கல்வி, வேதாகம ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை பேனட் சாந்த பர்னாந்து (மறைக்கல்வி மற்றும் வேதாகமம்)
அருட்தந்தை ஜவன் பெரேரா (கல்வி)

**2. சமூக தொலைத் தொடர்பாடல் பற்றிய தேசிய இயக்குனர்**
அருட்தந்தை லால் புஷ்பதேவ (அமதி)

**3. மத உரையாடல் ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை பெசில் றொகான் பர்னாந்து

**4. திருவழிபாடு, கலாசாரப்பணிகளுக்கான ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை T. சூசைநாதன்

**5. பொதுநிலையினருக்கான ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை றோய் கிளரென்ஸ்

**6.சிறிய கிறிஸ்தவ குழுக்கள் (அசிபா) ஆணைக் குழுவின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை ஹயசிந்த் திசேரா

**7. புனித வின்சன் டி போல் சபை ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை றோய் கிளரென்ஸ்

**8. கத்தோலிக்க தேசிய பொதுநிலையினருக்கான ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை டோனி மார்ட்டீன்

**9. சமாதானம் மற்றும் மனித அபிவிருத்தி பற்றிய தேசிய ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை மகேந்திர குணதிலக்க

**10. புலம் பெயர்ந்தோர், உடல் நலம், சுற்றுலா, சிறைச்சாலை பணிகளுக்கான தேசிய ஆணைக்குழு வின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை சஞ்சீவ மென்டிஸ்

**11. மரியாயின் சேனை ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை இக்னேஷியஸ் வர்ணகுலசிங்கம்

**12. கத்தோலிக்க இளைஞர் சங்கத்தின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை மெல்கம் பெரேரா

**13. குடும்ப அப்போஸ்தலிக்க பணியகத்தின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை குளோட் N. நோனிஸ்

**14. குருசில்லோ ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை டோனி மார்ட்டீன்

**15. புனித லூக்காவில் மருத்துவக் குழு ஆணைக் குழுவின் தேசிய இயக்குனர்**
அருட்தந்தை கிறிஸ்பின் லியோ

## மக்கள் பணியாற்றும் அனைவருக்கும் நேர்மை அவசியம் – திருத்தந்தை

யூன் 24, முதல், 26, முடிய இத்தாலியின் பெனெவெந்தோ எனுமிடத்தில் நடைபெறும் ஒரு கருத்தரங்கையொட்டி, பெனெவெந்தோ உயர் மறைமாவட்ட பேராயர் பெலிச்சே அக்ரோக்கா (Felice Accrocca) அவர்களுக்கு திருத்தந்தை அனுப்பியுள்ள செய்தியில் இவ்வாறு கூறியுள்ளார்.

சமுதாய வாழ்வில் பொறுப்பில் உள்ளோருக்காக நடத்தப்படும் இந்தக் கருத்தரங்கு வழியே, அப்பகுதியில் வாழும் மக்கள் மீது திரு அவை கொண்டுள்ள அக்கறை வெளிச்சமாகிறது என்று திருத்தந்தை தன் மடலில் குறிப்பிட்டுள்ளார்.மக்களுக்குப் பணியாற்றும் அனைவருமே நேர்மை, வெளிப் படைத்தன்மை ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும் என்று தன் மடலில் வலியுறுத்தியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சமுதாய சிந்தனைகள் கொண்ட திருஅவை ஏடுகளும் இக்கருத்தரங்கில், விவாதிக்கப்பட உள்ளது குறித்து தன் மகிழ்வை வெளியிட்டுள்ளார்.

இக்கருத்தரங்கின் விளைவாக, நலிவுற்ற மக்கள் நடுவே நம்பிக்கை தரும் விடயங்கள் பல வெளியாகும் என்று தான் நம்புவதாகவும், அதற்காக தன் செபங்களையும் ஆசீரையும் வழங்குவதாகவும் திருத்தந்தை இம்மடலின் இறுதியில் கூறியுள்ளார்.

### பல்சமய உரையாடல் – ஆசியக் கண்ணோட்டம்

செபம், உண்ணாநோன்பு, தர்மம், திருப்பயணம் ஆகிய உன்னத செயற்பாடுகள், அனைத்து உண்மையான மதங்களிலும் உள்ளன என்றும், மதங்கள் வெறுப்பை உருவாக்குகின்றன என்று சொல்வது பொய்யான கருத்து என்றும், திருப்பீட உயர் அதிகாரி ஒருவர் பன்னாட்டு கருத்தரங்கிற்கு அனுப்பிய செய்தியில் கூறியுள்ளார்.

பிரிவுகளை அல்ல ஒருங்கிணைப்பை உருவாக்குவதே இறைவனின் செயல் என்றும், அவர் பெயரால் பிரிவுகளை உருவாக்குவது தவறு என்றும் அச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விசுவாசத்தை மையப்படுத்தி திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி

உறுதியான உறவு முறையாக இருக்கும் விசுவாசத்தை மையப்படுத்தி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் டுவிட்டர் செய்தியை வெளியிட்டுள்ளார்.

"ஓர் உறவாகவும், சந்திப்பாகவும் விளங்கும் விசுவாசத்தின் துணைகொண்டு, இறையன்பின் தூண்டுதலின் கீழ், பிறரை வரவேற்கவும், அவர்களுடன் தொடர்புகொள்ளவும், அவர்களின் கொடைகளைப் புரிந்துகொள்ளவும், அதற்கு உரிய முறையில் பதிலிறுக்கவும் இயலும்" என்ற சொற்கள் திருத்தந்தையின் டுவிட்டர் செய்தியில் பதிவாகியிருந்தன.

'பாலம் அமைப்பவர்' என்ற பொருள் படும் Pontifex என்ற இலத்தீன் சொல்லை, தன் டுவிட்டர் முகவரியாகக் கொண்டு, ஒவ்வொரு நாளும் திருத்தந்தை வழங்கிவரும் டுவிட்டர் செய்திகள், இத்தாலியம், ஆங்கிலம், பிரெஞ்சு, இஸ்பானியம், போர்த்துகீசியம், ஜெர்மன், போலந்து, இலத்தீன் மற்றும் அரேபியம் ஆகிய ஒன்பது மொழிகளில் வெளியாகின்றன.

யூன் 18, தன் டுவிட்டர் பக்கத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்திகள், 2,026 என்பதும், அவரது டுவிட்டர் பதிவுகளை, ஆங்கில மொழியில் பின்பற்றுவோரின் எண்ணிக்கை மட்டும், 1 கோடியே 81 இலட்சம் என்பதும் குறிப்பிடத்தக்கன.

இத்துடன், @franciscus என்ற பெயரில் இயங்கி வரும் instagram முக-வரியில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மேற்கொள்ளும் செயற்பாடுகள் படங்களாக, காணொ ளிகளாக வெளியாகி வருகின்றன.

மூன்று ஆண்டுகளுக்கு முன் நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட காமெரீனோ நகருக்கு, ஜூன் 16, திருத்தந்தை சென்றபோது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இம்முகவரியில் இறுதியாகப் பதிவாகியுள்ளன.

திருத்தந்தையின் செயல்பாடுகளை மையப்படுத்தி, instagram முகவரியில், அவ்வப் போது வெளியிடப்பட்டு வரும் படங்கள் மற்றும் காணொளிகள், இதுவரை 728 என்பதும், அவற் றைப் பின்பற்றுவோரின் எண்ணிக்கை 62 இலட்சம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அழகு சாதனப் பொருட்களினால் ஏற்படும் ஆபத்துக்கள்

நவீன உலகில் நாம் எமது உடலை செயற்கையாக அலங்கரிப்பதில் ஆர்வம் காட்டுகின்றோம். எமது இயற்கையான அழகை விடுத்து எமது உடலின் பாகங்களான தோல், முடி, உதடு, நகங்கள், பற்கள் என்பவற்றை மாற்றுவதற்கும் சுத்தப்படுத்துவதற்கும் மெருகூட்டுவதற்கும் பல அழகு சாதன உற்பத்திகள் பயன்படுகின்றன. உதாரணமாக தோல் கிரீம்கள், ஷம்போ, பற்பசைகள் என்பன அடங்கும்.

ஷம்போ, பற்பசைகள் போன்றவை உடனடியாக உடலிலிருந்து அகற்றப்படுகின்ற போதிலும் ஏனைய நறுமணங்கள், உடல் லோஷன்கள், உதட்டுச் சாயங்கள்இ முடி நிறமாக்கிகள் பல மணி நேரம் உடலில் பூசப்பட்டு இருக்கின்றன. தோல் பற்றிய நிபுணர்கள் இவற்றினது நன்மைகளையும் விட ஆபத்தான விளைவுகளையே கருதுகின்றனர்.

அழகு சாதனப்பொருட்களில் உள்ள சில இரசாயனச் சேர்வைகள் மனித தோலினூடாக ஊடுருவிச் சென்று பல்வேறு பாதகமான விளைவுகளை எமது உடலில் ஏற்படுத்துகின்றன. தோல் கிரீம்கள் சிலருக்கு உடனடியாக ஒவ்வாமையும் எதிர் உணர்ச்சி காட்டுபவையாகவும் காணப்படுகின்றது. உடல் தூவல் நறுமணங்கள் விரைவாக ஆவியாகக்கூடியதாகக் காணப்படுவதுடன் எமது சுவாசத்துடன் கலந்து விடுகின்றன. உதட்டுச் சாயங்கள் நேரடியாக உதட்டினால் உள்ளெடுக்கப்படுகின்றன. இவ்வாறு அழகுசாதனப் பொருட்கள் உடனடித் தாக்கங்களை காட்டாத போதும் தோல் மூலம் உறிஞ்சப்படுவன உள்ளெடுக்கப்பட்டவை சுவாசிக்கப்பட்டவை நீண்ட கால விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

உலக அழகு சாதன உற்பத்தியாளர்கள் மிக விரைவான வீதத்தில் புதிய உற்பத்திகளை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதுடன் புதிய உற்பத்திகளை உருவாக்கவும் இன்னும் தரம் உயர்த்துவதற்காகவும் பெருமளவான இரசாயனப் பதார்த்தங்கள் சேர்க்கப்படுகின்றன. இவ்விரசாயனப் பதார்த்தங்கள் உற்பத்திப் பொருளினூடாக மனித உடலினுள்



எடுத்துச் செல்லப்படுகின்றது.

அழகு சாதனப் பொருட்கம்பனிகள் ஆய்வுக்குட்படுத்தப்படாத உற்பத்திகளை சந்தைப்படுத்துவதால் புற்றுநோய்கள், பிறப்பிலான குறைபாடுகள், ஒவ்வாமை, சுவாசம், இனப்பெருக்கம் தொடர்பான நோய்களும் சுகாதார அச்சுறுத்தல்களும் ஏற்படுகின்றன. வோமல்டிகைட், ஈயம், பார உலோகங்கள் அடங்கிய பல அழகு சாதனப் பொருட்கள் தடை செய்யப்பட்டுள்ளன.

**நிறமாக்கிகள் ஏற்படுத்தும் சுகாதார விளைவுகள்**

1. (AGO) ஏசோ கூட்ட நிறமாக்கி -
   புற்றுநோய்
   பரம்பரை விகாரங்கள்
   சுவாச நோய்கள்
2. வோமல்டிகைட் நற்காப்பி - புற்றுநோய்
3. குளோரோபோம்(கரைப்பான்)
   தோல் அழற்சி, நரம்புப் பாதிப்புக்கள்
4. பொலி எதலீன் கிளைகோல்
   சிறுநீரகப்பாதிப்பு
   (கரைப்பானாக)
   புற்றுநோய்
5. சலிசிலிக்கமிலம்
   தோல்அழற்சி
   (தோல் கிரீம்) சுவாச நோய்கள்
6. கனிய எண்ணெய்
   ஈரல்பாதிப்பு (தோல் கிரீம்களில்)
   வயிற்றோட்டம்
7. அக்ரிலோட்(நகப்பூச்சில்) -
   புற்றுநோய்
8. ஆர்சினிக், அந்திமணி
   கட்மியம் எனும் பார உலோகங்கள் சிறுநீரகப் புற்றுநோய்
   (உதட்டு சாயத்தில்) வாந்தி , வயிற்றோட்டம், சுவாசப்பை புற்றுநோய்
9. குரோமியம், கோபோல்ற்று
   இரசம் என்னும் பார உலோகங்கள்
   நரம்பு சார் நோய்கள் (மஸ்காரா, கண் சாயங்கள்) தோல் ஒவ்வாமை, சிறுநீரகப் புற்றுநோய்
10. பைன் எண்ணெய்
   கண்அழற்சி (சலவைப் பொருட்களில்)
   உணவுக்கால்வாய் அழற்சி

இவ்வாறு அழகுசாதனப்பொருட்கள் நம்மை அறியாமலேயே எம்முடலில் புகுந்து பல்வேறு நோய்களை ஏற் படுத்துவதனை அறிய முடிகிறது. அத்துடன் நாம் விரும்பி பயன்படுத்தும் நறுமணமாக்கிகளில் அற்கோல் அளவு 80% மாகக் காணப்படுவதால் மார்பகப் புற்றுநோய்க்கு இட்டுச்செல்கின்றது. சிகரெட் புகைமற்றவர்களை பாதிப்பது போன்று நறுமணமாக்கிகள் அவற்றின் ஆவியாகும் தன்மை காரணமாக இதனைப் பயன்படுத்தாதவர்களுக்கும் சுகாதாரப் பிரச்சினையை ஏற்படுத்துகின்றது.

உடலில் ஏற்படும் துர்நாற்றத்தினை நீக்க துர்மண நீக்கிகள் பயன்படுகின்றன. இதில் நுண்ணங்கி எதிர் பதார்த்தங்கள்

**அருட்சகோதரி றோமலா அன்ரனி (HC)**

அடங்கியுள்ளன. அத்துடன் வியர்வையைத் தடுக்கும் பதார்த்தமாக அலுமினியம் பயன்படுகின்றது. இவை உடலில் வியர்வை உருவாகும் அளவைக் குறைத்து உடலிலிருந்து கழிவுப்பொருட்கள் வெளியேறாமல் தடுக்கின்றது. இவ்வாறாக நாம் அன்றாடம் பயன்படுத்தும் நறுமணமாக்கிகள், அழகுசாதனப் பொருட்கள், நிறமாக்கிகள் கொண்டுள்ள சுகாதார ரீதியான பாதக விளைவுகளை நாம் அறியாமல் இருக்கின்றோம்.

இவற்றைத் தெரிந்து கொண்டு எமது உடலுக்கு தீங்கு விளைவிக்கும் பதார்த்தங்களைத் தவிர்த்து நற்சுகாதாரமுள்ள வாழ்க்கைமுறையைத் தெரிவு செய்வோம். இயற்கை தந்த அழகுசாதனப் பொருட்களுக்கும் தொற்று நீக்கிகளுக்கும் முன்னுரிமை கொடுத்து நோயற்ற வாழ்வை வாழுவோம். சந்தனம், மஞ்சள், எலுமிச்சை சாறு, தேன், தயிர், பாலாடை, உப்பு என்னும் இயற்கை நற்காப்பிகள் எம் உடலை அழகுபடுத்த பயன்படுத்த எம்மை பழக்கப்படுத்துவோம். இயற்கையை நேசித்து இயற்கையோடு இயல்பாக இயங்கிடுவோம். இயற்கை இரசாயனமற்ற சுழற்சியை மாசுபடா இயங்கிடும். ●

# உம்மைப் பின்னடைய வைப்பது என்ன?

அது ஒரு பகிரங்கக்கூட்டம். பேச்சாளர் கேள்விகளுக்கான பதில்களைக் கொடுத்துக்கொண்டிருந்தார். அன்ரனுக்கு அவ்விடயத்திலே அதீத அர்வம். அவர் அவ்விடயத்தை நன்கு கற்றிருந்தது மாத்திரமல்ல சாதாரண ஒருவரை விட மிகச்சிறந்தவிதமாக அவ்விடயத்தைத் தெரிந்திருந்தார்.

வீட்டில் தன் மனைவியோடும் நண்பர்களோடும் சரளமாகப் பேசுவது மாத்திரமல்ல, தேவையான தரவுகளைத் தாமதமின்றித் தாராளமாகக் கொடுத்து உரையாடலை மிக ரசனையாக்கினார். ஆனால் அவர் கேள்வி கேட்க எழுந்ததும், ஏதோ அவரைத் தடுத்துப் பின்வாங்க வைத்தது. குரல் அடைத்து பேச்சைத் தொடரவிடாமல் குழப்பியது. அவர் ஒரு வேறு மனிதனாகக் காணப்பட்டார். அவரது உண்மைத் தோற்றத்தின் நிழல்போலவே காட்சியளித்தார்.

மற்றவர்கள் மத்தியில் நையாண்டிக்குரியவராக நாம் காட்சியளிப்பது போல மனவேதனை தருவது வேறொன்றுமில்லை. எம்மைப் பின்னடைய வைப்பது என்ன? இதை எவ்வாறு மேற்கொள்ளலாம்? நீங்கள் மற்றவர்களுக்கு நடப்பதை அறிவுபூர்வமாகப் படிக்க ஆசைப்பட்டால், மற்றவர்களும் உங்களைப்போலவே இயல்பாகச் செற்படப் போராடிக்கொண்டிருப்பதற்குப் போதிய ஆதாரங்கள் கிடைக்கும். நாம் இதில் தனிமரமாக நிற்கவில்லையென்பது புலப்படும். அத்தோடு நாம் நிறுத்திவிடக்கூடாது. ஏன் இவ்வாறு நடக்கிறதென்று ஆராய்ந்து கண்டுபிடிக்க வேண்டும்.

உதாரணமாக, அன்ரன் அன்பான முன்னேற்றமான கடின உழைப்புள்ள பெற்றோரின் மகன். அவர்கள் உண்மையில் நல்லவர்கள். தமது மகனை நேசித்தார்கள். அவர்கள் தங்கள் வாழ்வு முழுவதும் சிறிய ஊதியத்திற்காகக் கடினமாக உழைத்தார்கள். குடும்பத்தை நன்கு பராமரித்துக் கட்டியெழுப்புவதற்கு எவ்வளவோ அங்கலாய்ப்போடு முயற்சித்தார்கள்.

இத்தகைய அங்கலாய்ப்பு நிறைந்த சூழலில்தான் அன்ரன் வளர்ந்தார். விரைவிலே தன் கல்வியை நிறைவுசெய்து தனது பெற்றோருக்குப் பொருளாதாரத்தில் உதவியாக இருக்க ஒரு நல்ல வேலையைத் தேடுவதே அன்ரனின் அவாவாக இருந்தது. அவர் தனது பெற்றோர், சக ஊழியர்கள் மற்றும் அனைவரையும் மகிழ்ச்சிப்படுத்தவே விரும்பினார். அவர் எவ்வளவுக்கு மற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்த முயன்றாரென்றால் அது அவரை சீர்பட முடியாதவாறு அங்கலாய்ப்புக்கு உள்ளாக்கியது.

அவர் கூட்டத்தில் கேள்விகேட்க எழுந்தால் மற்றவர்கள் தன்னை விமர்சித்து, நையாண்டி செய்து அனைவர் முன்னும் தன்னைக் கேலிக்குள்ளாக்கி விடுவார்களோ என்ற பயம் அவரை ஆட்கொண்டது. அவரது பேச்சுத்திறனும் விடயத்தில் அவருக்கிருந்த ஆர்வமும் மற்றவர்முன் தான் எப்படியான அபிப்பிராயத்தை ஏற்படுத்தி உலகத்தின் கண்ணுக்கு எப்படித் தோன்றுவாரென்ற ஏக்கத்தினால் மூழ்கடிக்கப்பட்டது.

தவறு செய்து மடையனாகத் தோன்றி மற்றவர்களால் இகழப்படுவேனோ என்ற பயம் எம்மைப் பின்னடைய வைக்கிறது. மற்றவர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்? என்ன சொல்லுவார்கள்? நான் கேலி செய்யப்படுவேனோ? பண்பற்றவன், உதவாதவன், ஏற்றுக்கொள்ள முடியாதவன் போன்ற எண்ணங்கள் எம்மை வெகுவாகப் பின்னடைய வைக்கும். நான் இப்படிப் பேசியதால் அல்லது எழுதியதால் கவலைப்படுகிறேனோ என்ற அளவு மீறிய சுய உணர்வு எம்மைப் பின்னடைய வைக்கும். இவையனைத்தின் பின்புலத்தில் 'பயந்த சிறுவன்' அல்லது 'தடைக்கட்டுடைய' சிறுமி என்ற அடிமன அபிப்பிராயம் தேங்கிக்கிடக்கிறது.

உமது சிறுபராயத்தை மீள் பார்வை செய்து உம்மைப்பற்றி அதிகம் கவலைப்படுவதற்கு மற்றவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக அங்கலாய்ப்பதற்கு, மற்றவர்களைப் பற்றிப் பயப்படுவதற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்து பாரும். சிறுவர்கள் தான் பல வேளைகளில் தமது வளர்ந்த வயதில் தாம் செய்யும் செயல்களை மற்றவர்கள் காண்பது பற்றி அதிகம் அங்கலாய்ப்பார்கள்.

இப்படியான ஒரு நிலை கண்டிப்புள்ள பெற்றோரின் அதீத கண்டிப்பால் வாழ்வில் நீடிக்கும் அச்சம், சிறுவயதில் அதீத அன்பும் பாதுகாப்பும் பெற்றபிள்ளை மற்றவர் தன்னைப்பற்றி அனுதாபப்படும்

**அருட்பணி**
**மா.றேஜிஸ் இராசநாயகம்**

பொழுது அல்லது மற்றவர்களது அன்புள்ள கவனத்தை ஈர்க்கும்பொழுது மகிழ்ச்சிகொள்ளும், புறந்தள்ளும், விமர்சனம் போன்றவை சிலவேளை- களில் ஆரோக்கியமற்ற போட்டிகள்கூட ஆரோக்கியமான முயற்சிகளைத் தடைப்படுத்தும்.

தாழ்வு மனப்பான்மையோடு வாழ வேண்டாம். அவை பற்றி நன்கு அறிந்து அவற்றிலிருந்து விடுபட முயற்சிக்கவும். இதுகூட நன்றாக நீர் வாழ உதவிசெய்யும். பின்வரும் கேள்விகளைக் கேட்டுப்பாரும். இந்தப் பிரச்சினையிலிருந்து விடுபட்டு தன்நம்பிக்கையை ஏற்படுத்த நான் என்ன செய்யலாம்? நான் அழகாக உடுத்த முடியுமா? அல்லது அன்புறவை வளர்க்க முடியுமா? என்னுடைய அறிவில் வளருவதற்கு நீடித்த பயிற்சியில் ஈடுபடமுடியுமா? சமூக சேவைகளில் இன்னும் கூடுதலாக ஈடுபடுவது எனக்கு உதவி செய்யுமா? அல்லது அமைதியிலிருந்து என்னைப் பற்றி ஆராய்ந்து அறிவது நன்மை பயக்குமா?

ஒரு விடயத்தை நன்கு அறிவது தான் அனைத்திலும் மிகமுக்கியமானது. வெளியுலகோடு எமக்கு நல்ல தொடர்பு இருக்கவேண்டும். இது எம்மை நாமாக, பயமோ காழ்ப்புணர்வோ இன்றி ஏற்றுக் கொள்ளச் செய்யும். அதன் பின்னர்தான் மற்றவர்கள் நம்மை ஏற்றுக்கொள்வதோ ஏற்றுக்கொள்ளாததோ எம்மைப் பாதிக்காதவாறு எமது வாழ்வில் அவர்களுக்கு சரியான இடத்தைக் கொடுக்க முடியும்.

மற்றவர்களுக்கு முன்பாக நாம் ஒரு விடயத்தைக் கற்கவேண்டியிருக்கும் என்பதாலோ அல்லது மற்றவர்கள் எமது பிழைகளைச் சுட்டிக்காட்டுவார்கள் என்பதாலோ எம்மில் எத்தனைபேர் புதிய விடயங்களைக் கற்றுக்கொள்ளப் பின்வாங்குகிறோம்? நாம் எமக்குக் கொடுக்கக்கூடிய சிறந்த பரிசு என்னவென்றால் துணிந்து போதல். இன்னொரு விதத்தில் சொன்னால் கூட்டத்தில் ஒருவராக எம்மை எண்ணிக்கொண்டு எல்லாத் தடைகளையும் தாண்டி பகிடி, விவாதம் அனைத்தினூடாகவும் சென்று வாழ்வில் எமக்குரிய இடத்தை நாம் தக்கவைத்துக் கொள்வது.

இப்படி முகங்கொடுக்க முடியாதெனில், உமது மனப்பாங்கைக் கவனித்துப்பாரும். அதனடிப்படையில் மற்றவர்கள் மத்தியில் நீர் முழுமையான ஈடுபாடு கொண்டு மகிழ்ச்சியடையவும், முன்னேற்றமடையவும் தடையாயிருப்பது எதுவென்று கண்டுபிடியும். ●

## இது தான் எங்கள் கலாசாரமா?

சென்ற கத்தோலிக்க வார ஏடு (June 16, 2019) தலைப்பு "கொலை சிறிலங்காவின் கலாசாரம் கவலைக்குரியது: சொல்லியவர் பேராயர் மல்கம் றஞ்சித் ஆண்டகை அவர்கள். அரசியல் வாதிகளைச்சாடியுள்ளார். இது உண்மை ஆனாலும், இந்தக் கலாசாரத்தின் வரலாற்றை ஆயர் அவர்கள் எடுத்துரைக்கவில்லை. ஒருவேளை அதற்குரிய நேரம் அதுவல்ல ஆயினும் இப்படி ஒரு கூற்றை பேராயர் சொல்லியது ஒரு பெரிய சவால். அதேபக்கத்தில்மேலும்ஒருசெய்தியுள்ளது. "கருதினால் றஞ்சித் ஆண்டகைஅவர்கள் துணிவோடு சொன்னார். இது ஒரு பௌத்த நாடு" என்று குணரத்தின தேரர் சொல்லியுள்ளார். இரண்டையும் இணைத்தால் இந்த பௌத்த நாடு ஒரு கொலைகார கலாசாரத்தையே வளர்த்துள்ளது என்ற ஒரு முடிவுக்கு வரவேண்டி உள்ளது. இது பௌத்தத்திற்கு முற்றிலும் முரணானது. இந்நாட்டு பௌத்தர்கள் மட்டுமல்ல, அனைத்து இலங்கையர்களும் வெட்கித் தலைகுனிய வேண்டும். நான்கு மதங்களும் ஆராதனைகளையும், செபங்களையும், வழிபாடுகளையும், ஓதல்களையும்

### பாகுபாடுகள் வளர்ந்துள்ளன

இன்று இந்த நாடு பல்வேறு வகையில் பிரிந்துள்ளது. கத்தோலிக்க மதத்தினுள் கூட இந்தப் பிரிவினை வளர்ந்துவிட்டது. இதை நான் வெளிப்படையாக் கூறுவதை சிலர் விரும்பமாட்டார்கள். உண்மை எடுத்துரைக்கப்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளப் பட வேண்டும். அப்பொழுது தான் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். கத்தோலிக்கரிடையே இந்தப் பாகுபாடு ஆயர்களிடையே உண்டு. குருக்களிடையே உண்டு. துறவிகளிடையே உண்டு. இதை மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. இப்படிப் பட்ட ஒரு திருச்சபை கிறிஸ்துவிற்கு சான்று பகராது. முரணாக இயேசுவின் வார்த்தைகள் உண்மையாகும். "தனக்கெதிராகத் தானே பிளவுபடும் எந்த அரசும் பாழாய்ப் போகும். அவ்வாறே தனக்கு எதிராகத் தானே பிளவுபடும் எந்த நகரமும், வீடும் நிலைத்து நிற்காது" (மத்.12:25). இது, இயேசுவின் சத்தியமான வார்த்தைகள். இதை நாம் இனியாவது உணர்வோமா?


இந்தப் பாகுபாட்டை அகற்றி ஓர்மை உணர்வை (Unitive Consciousness) நோக்கி வாழ்வோமா? இது. எமக்குள்ள இன்றைய சவால். மனிதர்கள் உருவாக்கிய எந்த ஒரு பிரச்சினையையும் மனிதர்களால்

# 04 இருளில் தோய்ந்த உயிர்ப்பு விழா

வளர்த்திருக்கின்றனவே தவிர நான்கு மதங்களும் சொல்லிய கருணையை அன்பை வளர்க்கத் தவறியதேன்?

### இன்று நேற்றல்ல

இந்தக் கொலைக் கலாசாரம் உயிர்த்த ஞாயிறு தினத்தில் கோவில்களிலும் ஐந்து நட்சத்திர விடுதிகளிலும் நடந்தேறிய குண்டுத்தாக்குதலினுடன் ஆரம்பமானதல்ல. இந்த நாடு சுதந்திரம் பெற்ற காலந் தொட்டு அடுத்தடுத்து பல்வேறு வேளைகளிலும் தமிழர்களும், அண்மையில் முஸ்லீம் மக்களும் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள். கொள்ளை, கொலை, வீடு. கடை எரிப்புக்கள். காலகாலமாக



## பிளவுகளில் ஒற்றுமை வராது: வர முடியாது

நடைபெற்று வந்தமை இந்த நாட்டின் கவலைக்குரிய வரலாறு - இங்கு இருமுறை ஜே.வி.பி யினர் கிளர்ச்சியில் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான இளைஞர்களை நான் மறக்கவில்லை. மறவேன்.

### ஏன் குரல் கொடுக்கத் தவறினோம்?

இந்த வேளைகளில் ஆயர்கள், குருக்கள் இவற்றைத் கண்டித்தும் பேசவில்லை. அறிக்கைகள் விடவில்லை. அன்று தொட்டு இன்று வரை குற்றம் செய்தோர், செய்வித்தோர் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை. நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப் படவில்லை. "பாரிய தவறு செய்தவர்கள்

**கரவையூர் செல்வம்**

தண்டிக்கப்படாமைக்கான சிறிலங்காவின் கேடு" என்று 1977ம் ஆண்டுக் கலவரத்தின் போது இந்நாட்டிற்கு வருகை தந்து, ஆராய்ந்த பின்னர் எழுதிய கட்டுரையின் முதல் வசனந்தான் நான் மேற்கூறிய வசனம். இதை எழுதியவர் ஆங்கில நாட்டைச் சேர்ந்த ஊடகவியலாளரும் வரலாற்று ஆசிரியருமான டேவிட் செல்போன். அவருடைய கூற்று 1958ம் ஆண்டு ஆரம்பித்த கலவரம் தொட்டு இன்று வரை நடந்து கொண்டே இருக்கின்றது. இப்பொழுது தான் பேராயரும் யாழ் ஆயரும் அரசியல்வாதிகளைச் சாடியுள்ளார்கள். வரவேற்க வேண்டியது ஒன்று.

### இதை ஏன் அன்றே செய்யவில்லை?

தமிழர்கள் தாக்கப்பட்ட பொழுது, கொலை செய்யப்பட்ட பொழுது, அவர்களுடைய வீடுகளும் கடைகளும் எரிக்கப்பட்டபொழுது, இது யாருக்கோ நடந்த ஒன்றாகப் பார்த்தார்களா? இது எங்களை பாதிக்கவில்லை என நினைத்தார்களா? அன்றேல் தமிழர்களுக்கு அடிக்கத்தான் வேண்டுமென்று எண்ணினார்களே இதைத்தான் நான் பாகுபாடு என்று கூறுகின்றேன். இது, இரட்டை வாதம் என்று சொல்லுகின்றேன்.

தீர்க்க முடியும். இதற்கு வேண்டியது- 'இதைச் செய்வோம் என்ற ஓர் திடமான செயற்பாடு! (The will to Change). அதை ஆயர்கள் தான் முன்னெடுக்க வேண்டும். உண்மையான நேர்மையான உரையாடல்கள் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும்.

முஸ்லீம் மக்கள் மதத்தால் ஒன்று படுகின்றார்கள். கத்தோலிக்கராகிய நாம் ஒரே மதத்தால், இனத்தால் வேறுபடுகின்றோம். இது இயேசுவின் நற்செய்திக்கு முரணானது. முற்றிலும் முரணானது. உயிர்ப்பு ஞாயிறின் பெரிய செய்தியாகக் கருதி ஒன்றுபட ஆவன செய்வோம். ஒற்றுமை, மன்னிப்பு, நல்லெண்ணம், சமாதானம் என்ற சொற்கள் இந்த நாட்டில் அர்த்தமற்றுப் போய்விட்டன. பாகுபாட்டை வளர்த்துக் கொண்டு நடத்தும் வழிபாடுகளும், ஆராதனைகளும் அர்த்தமற்றுப் போய்விடும். இவற்றிற்கு விதிவிலக்காக, சிலர் இந்த நாட்டில் நீதிக்காகவும் குரல் கொடுக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஒதுக்கப்படுகிறார்கள்.

இது பௌத்த நாடு, சிங்கள நாடு, தமிழ்ப் பிரதேசம், முஸ்லீம் பிரதேசம் என்ற பாகுபாடுகளை வளர்ப்போமானால் நாடு நாளும் அழியும். நாமனைவரும் இந்நாட்டு மக்கள், இங்கு பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பாகுபாடும் அழிவுக்கு வழி, மங்கள சமர வீர ஓர் பழைய அரசியல்வாதி, அவர் சிங்களவர். இருப்பினும் அரசியலைக்கடந்து இது, ஒரு பௌத்த நாடல்ல என்ற உண்மையைத் துணிந்து சொன்னார். அவர் அதற்கு வரலாற்று ரீதியான விளக்கத்தையும் ஆங்கில வார ஏடான Sunday Times இல் எழுதியிருந்தார். தனது கூற்றின் விளைவுகளை அறியாமல் அவர் சொல்லியிருக்க மாட்டார். ஆனால் உண்மைக்குச் சான்று பகர்ந்துள்ளார். வரலாற்று ரீதியாகப் பார்க்கும் பொழுது, இது ஒரு பௌத்த நாடுஎன்ற பேராயரின் கூற்றை வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். *(வளரும்..)*




# அனுபவங்களும் அறிகுறிகளும்

பயங்கரவாதச் செயல், இயற்கை அனர்த்தம், உறவு ஏமாற்றங்கள், துஸ்பிரயோகங்கள், வன்தாக்குதல்கள், வன்புணர்வு, கற்பிழத்தல், கருக்கொலை, நற்பெயரிழத்தல், கல்வித் தோல்வி, வேலை நீக்கம், எதிர்பார்ப்புகள், பொருளாதார வீழ்ச்சி, எனப்பல விடயங்கள் மனிதரைப் பாதிக்கின்றன. பெரும்பாலானோர் இவ்வாறான பாதிப்பு அனுபவங்களிலிருந்து மீண்டெழுகின்றனர். ஆனால் சிலர் காலங்காலமாகப் பாதிக்கப்பட்டு மனநோயளராகிவிடுவதுண்டு.

உளப்பாதிப்பு வரைவிலக்கணம்: உடல், உளரீதியாகச் சேதம் அல்லது கடும் துன்பம், அதிர்ச்சி, அச்சம் என்பன விளைவிக்கின்ற உண்மையான அல்லது கற்பனையான நிகழ்வே உளப்பாதிப்பு அனுபவமாகும். உடல்ரீதியாகவோ அல்லது உணர்வு ரீதியாகவோ தன்னைக் கையாள முடியாத அளவுக்குப் பாதிக்கும் ஒரு கடுமையான அனுபவமாக அமைகின்றபோதே பாதிப்பு அனுபவமாகின்றது.

### காணப்படும் அறிகுறிகள்:

ஒவ்வொரு பாதிப்பு அனுபவமும் தனித்துவமான அறிகுறிகளைக் கொண்டிருப்பினும் பல பொதுவான அறிகுறிகளைக் கொண்டுள்ளன.

### அ. உணர்ச்சி வெளிப்பாடுகள்:

பாதிப்பு அனுபவம் நிகழ்ந்த உண்மையை நம்பவோ ஏற்கவோ மறுக்கும் நிலை, கடுமையான உணர்ச்சிப் பாதிப்பால் உளம் மரத்துப்போதல், யதார்த்தமான அல்லது யதார்த்தமற்ற குற்ற உணர்வு, எதையுமே செய்ய இயலாத நிலையும் இதனால் பிறரின் ஆதரவுடனேயே இயங்கமுடியும் என்னும் கருதுதலும் காணப்படும். மேலும், மனச்சோர்வு, பொதுவான ஒரு அச்சம், மீளவும் நிகழலாம் என்ற பயம் போன்றவை காணப் படுவதுண்டு. ஏற்பட்ட துன்பம் தாங்க முடியாததாக அமையின் எங்காவது ஓட வேணும் போன்ற உணர்வு காணப்படும். சிலர் ஒரு இடத்தில் நிற்காது ஓடிக் கொண்டேயிருப்பர். பிறரோடு இருந்தாலும் தனிமை உணர்வும் தன்னை எவராலுமே புரிந்துகொள்ள முடியாது என்றும் கருதுவர்.

### ஆ. நடத்தை வெளிப்பாடுகள்:

பொறுமையிழந்து எளிதில் சண்டைபிடிப்பர், பிறரைவிட்டு ஒதுங்கி யிருப்பர். சிலர் துன்பத்தைத் தாங்கமுடியாது தம்மைக் காயப்படுத்துவர், அல்லது மது மற்றும் போதைப்பொருளுக்கு அடிமையாவர். சிலர் துன்பத்திலிருந்து விடுதலை பெறத் தற்கொலையை நாடுவர். தொடர்புச் சாதனங்களின் சத்தம் அதிகமாக இருந்தால் எரிச்சலடைவர். நிம்மதியாக இருந்தால் போதும் என்பதுபோல நடந்து கொள்வர். பாலியல் நாட்டமின்மை காணப்படும் அல்லது அதில் மட்டுமீறி ஈடுபடுவர். தொழிலையோ கல்வியையோ வழமை போல் செய்யமுடியாத நிலைக்குள்ளாவர். பயங்கரக் கனாக்கள் கண்டு திடுக்கிட்டு எழுதல் அடிக்கடி சில காலம் தொடரும் பின்னர் குறைந்துவிடும். பாதிப்பு அனுபவம் தொடர்பான ஆட்கள் இடங்கள், அனுபவங்கள், உணர்வுகள் என்பவற்றைத் தவிர்ப்பதில் ஈடுபடுவர். சிலரில் கடுமையாகத் திடுக்கிடுதல் நிகழ்வு ஏற்படும்.

### இ. உளநிலை வெளிப்பாடுகள்:

பாதிப்பு அனுபவ நினைவுகள் கட்டுப்பாடின்றிஅடிக்கடிதோன்றும். இதனாலேயே பலர் தாம் மனநோய் நிலையை அடையப்போவதாக அச்சமுறுவர். ஆனால் இது படிப்படியாகக் குறைந்து விடும். சிலர் இத்தகைய நினைவுகளைத் தவிர்ப்பதைப்

**அருட்பணி இராசேந்திரம் ஸ்ரலின்**

பழக்கமாகக் கொண்டிருக்கும்போது நல்ல அனுபவங்களையும் தவிர்க்கும் நிலையை அடைவர். இதனால் மகிழ்ச்சியான அனுபவங்களைக்கூட இரசிக்க முடியாத நிலை எய்துவர். மேலும் இவர்கள் எளிதில் பராக்கடைவர், மனதை ஒருமுகப்படுத்த முடியாது தவிப்பர். நினைவாற்றல் குறைவடைந்து காணப்படும். யதார்த்தமற்ற தீங்குமய எண்ணங்கள் காணப்படும். அதாவது இறந்தவரைத் தான் காப்பாற்றியிருக்கலாமே என்ற குற்ற உணர்வால் தவிப்பர். இது யதார்த்தமற்றது. பாலியல் துஸ்பிரயோகம் அல்லது வன்புணர்வுக்கு உள்ளானோர் அல்லது கருக்கொலை செய்தோர், நான் ஒன்றுக்கும் உதவாத ஆள். நான் அழுக்கான ஆள் என்று கருதுவர். இவர்கள் மனிதர்கள் நல்லவர்கள் அல்லது கெட்டவர்கள் என்று பிரித்துப் பார்ப்பார்களேயன்றி ஒரே மனிதரில் நல்லதையும் கெட்டவையும் உண்டு என்று சிந்திக்க இயலா திருப்பர். இத னால் பிறரில் அவ தானிக்கும் சிறிய பிழைகளைக்கூடச் சகிக்க முடியாது சண்டைபிடிப்பர். கடுமையான பாதிப்பு அனுபவமாயின் பிறரது உணர்வுகள் எண்ணங்களைப் புரியும் ஆற்றலின்றிக் காணப்படுவர். ஒழுக்கத்தோடு வாழ்ந்தவர்கள் ஒழுக்க விழுமியங்கள் பற்றிக் குழப்பமடைவர். முன்னர் ஏற்று வாழ்ந்த விழுமியங்களைக் கைவிடுவர். ஆந்த அனுபவம் தற்போதும் தன் கண்முன்னால் நிகழ்வதாகத் தோன்றும். பாதிப்பு அனுபவத்தின் முக்கிய பகுதியை நினைத்துப் பார்க்க முடியாமை காணப் படும். அத்தோடு சிலர் அந்த அனுபவத்தை மீட்டுப்பார்க்க விரும்பாது மனதுள் புதைத்துவிடுகின்றனர். ஆனால் அதன் பாதிப்பு நீடித்துக்கொண்டேயிருக்கும். இவர்கள் எளிதில் எரிச்சலடைவர். அததோடு எதிர்காலம் இருள் சூழ்ந்திருப்பாதாகத் தோன்றும்.

*(தொடர்ச்சி 8ம் பக்கம்)*

காவலன் கலசம்

# "நான் அழாமல் ஒருபோதும் கதை எழுதியதில்லை"

எழுத்தாளர் கே.ஆர்.டேவிற் (கிறகரி இராயப்பு டேவிற்) அவர்கள் ஈழத்தின் சிறந்த புனைகதை எழுத்தாளர்களில் ஒருவர். நான்கு நாவல்களையும் 200 மேற்பட்ட சிறுகதைகளையும் எழுதியுள்ளார் பல தேசிய சர்வதேச விருதுகளையும் பெற்றுள்ளார். இவர் மட்டுவிலைப்பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்டவர். ஆசிரியராக, சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக அதிபராக, உதவிக் கல்விப்பணிப்பாளராக கல்வி உலகில் 36 வருடங்கள் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள இவர் தொடர்ந்தும் எழுத்துத்துறையில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. அவரது நேர்காணலை இன்றைய கலைக்காவலன் பிரசுரிப்பதில் பெருமைகொள்கின்றது.



# எழுத்தாளர் கே. ஆர். டேவிற் அவர்களுடனான நேர்காணல்

**கேள்வி :- தங்களுக்கான எழுத்துத்துறைக்கான நாட்டம் எவ்வாறு ஏற்பட்டது.?**

**பதில்:** நான் படிக்கின்ற காலத்திலேயே ஓவியம், நாடகம், இசை போன்ற துறைகளில் அதிகம் நாட்டம் உள்ளவனாக இருந்தேன். அதற்குக் காரணம் எனது மட்டுவில் பிரதேசத்தில் மோகனதாஸ் சனசமூக நிலையம் ஒன்று இயங்கியது. யாழ்பாணத்தில் இயங்கிய சனசமூக நிலையங்களில் அது மிகவும் சிறப்பாக இயங்கியது. கலை, விளையாட்டு, எழுத்துத் துறைகளில் அதிக கவனம் செலுத்தினர். சிறிய வயதில் இருந்தே அங்கு சென்று வாசிக்கும் பழக்கம் எனக்கு ஏற்பட்டது. அந்த சனசமூக நிலையத்தினது நாடகங்களிலும் நடித்தேன். அது கலைத்துறையில் ஒரு தூண்டுதலாக இருந்தது. அதேவேளை டானியல், செ.யோகநாதன், டொமினிக்ஜீவா, நீர்வை பொன்னயன், என்.கே.இரகுநாதன், யோ. பெனடிக்ற்பாலன் போன்ற பிரபல்ய மான பல எழுத்தாளர்கள் அங்கு வந்து சென்றார்கள் அவர்களைப் பார்த்து ஒரு ஈர்ப்பு ஏற்பட்டது. அந்த ஈர்ப்புத்தான் நான் கதை கள் எழுதுவதற்குத் தூண்டுதலாக அமைந்தது. அவர்களூடாக நான் கற்றுக் கொண்ட பொது உடமைவாதச் சிந்தனையே எனது படைப்புக்களில் செல்வாக்குச் செலுத்தியது. எனது ஊக்கத்தினைக்கண்டு செ.யோகநாதன் போன்றோர் என்னைத் தட்டிக் கொடுத்து செயற்படத்தூண்டினார்கள். அது மட்டுமன்றி நான் அனுபவித்த வறுமை, பணிசெய்த இடங்கள் நண்பர்கள் எனப்பலவும் எனது எழுத்துத்துறையின் தூண்டுகைக்குக் காரணம் எனலாம்

**கேள்வி :- உங்களது முதலாவது படைப்பு எப்போது வெளிவந்தது ?**

**பதில் :-** 1966 ஆம் ஆண்டு 'புகலிடம்' என்ற எனது சிறுகதைதான் முதன் முதலாக சுதந்திரன் பத்திரிகையில் வெளி வந்தது. ஆனால் முதலில் நூலாக வெளிவந்தது எனது 'வரலாறு அவளைத் தோற்று விட்டது' என்ற நாவல்தான் அது வீரகேசரி பிரசுரமாக வெளிவந்தது

**கேள்வி :- நீங்கள் எழுதிய நூல்கள்பற்றிக் கூற முடியுமா..?**

**பதில் :-** நாவல்களும் சிறுகதைகளுமே அதிகமாக வெளிவந்தன. 'வரலாறு அவளைத் தோற்று விட்டது' (1976) 'ஆறு கள் பின்னோக்கிப் பாய்வதில்லை' (1987) 'பாலவனப் பயணிகள்' (1989) 'வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை' (1991) என்பன நாவல்கள், 'ஒரு பிடி மண்'(1994) 'பாடுகள்' 2012), 'மண்ணின் முனகல்' (2012), 'நீரில் கிழித்த கோடுகள்' (2015) என்பன சிறுகதைத் தொகுதிகள் 200க்கும் மேற்பட்ட எனது சிறுகதைகள் பல பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. வீரகேசரி, தினக்குரல், தினகரன், ஈழநாடு, ஈழமுரசு, ஈழநாதம், உதயன், முரசொலி, பாதுகாவலன்போன்ற பத்திரிகைகளிலும் மல்லிகை, ஜீவநதி, சுடர், கலைமுகம் தமிழ்முற்றம் போன்ற சஞ்சிகைகளிலும் வெளியாகியுள்ளன. எனது எழுத்துத்துறைக்கு கிடைத்த வெற்றி என்னவென்றால் நான் எழுதிய எந்தக் கதையும் பிரசுரமாகாமல் போகவில்லை

**கேள்வி :- உங்கள் சிறுகதைகளுக்கான உந்துதல்கள் எவ்வாறு கிடைத்தன ?**

**பதில் :-** நான் ஏற்கனவே கூறிய எழுத்தாளர்கள் ஊக்கமாக இருந்தார்கள். அதனைவிட ஆசிரியராகப் பணியாற்றிய நான் இலங்கையின் பல பாகங்களிலும் நாடலங்கலாகப் பணிசெய்துள்ளேன். அந்த அனுபவம் எனக்குப் பல விடயங்களைக் கற்றுத் தந்தது. நுவரெலியா மாவட்டத்தில் பூண்டுலோயா தமிழ் மகாவித்தியாலயம், கொழும்பு இந்துக்கல்லூரி, மூதூர் புனித அந்தோனியார் மகாவித்தியாலயம், திருகோணமலை கோபாலபுரம் G.T.M.S, நிலாவெளி றோ.க.வித்தியாலயம், நாவந்துறை சென் மேரிஸ் வித்தியாலயம் என எனது பணித்தளம் நீண்டு சென்றது ஒவ்வொரு பிரதேசங்களிலும் வெவ்வேறு விதமான பிரச்சினைகள். அவை எனக்கு கதைகளுக்கான களங்களைத் தந்தன. அதுமட்டுமன்றி பலபிரதேச எழுத்தாளர்களோடும் எனக்குத்தொடர்புஏற்பட்டது அவர்களுடன் நெருக்கமாகப் பழகிய அனுபவமும் எனக்கு ஊக்கமாக இருந்துள்ளது.

**கேள்வி :- பொதுவாக எழுத்தாளர்களில் ஏதாவதொரு சிந்தனையாக்கம் செல்வாக்குச் செலுத்தும்என்பார்கள். உங்களுடைய எழுத்துக்களில் செல்வாக்கு செலுத்தி நின்ற சிந்தனைகள்..**

**பதில் :-** என்னுடைய எழுத்தின் அடிநாதமாக இருந்தது மார்க்ஸிய சிந்தனை எனக்கூறப்படுகின்ற பொது உடமைவாதச் சிந்தனைதான். அந்தச் சிந்தனைதான் மனிதாபிமானத்தினைநாம்வாழ்வதற்குத் தூண்டுவது. என்னை எழுதத்தூண்டியவர்களும் மார்க்ஸியவாதிகளே. அதற்காக நான் அந்தக் கோட்பாட்டுக்குள் வாழ்ந்தவனல்ல கோட்பாட்டுடன் வாழ்ந்தவன் என்று கூறலாம். மக்களின் பிரச்சினைகளுக்குள் அக் கோட்பாட்டைக் கண்டேனே அன்றி கோட்பாட்டுக்கூடாக நான் மக்களைப் பார்க்கவில்லை. ஆனால் எனது படைப்புக்களில் பொது உடமைவாதச் சிந்தனையே அதிகம் இருப்பதாக விமர்சகர்கள் கூறுவர்

**கேள்வி :- நீங்கள் ஒரு கிறிஸ்தவன் என்ற வகையில் கிறிஸ்த சிந்தனைகள் உங்கள் கதைகளில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தின.**

**பதில் :-** மார்க்ஸியம் என்னில் ஏற்படுத்திய தாக்கத்தினைப் போலவே தொடக்கம் முதல் திருவிவிலியமும் கிறிஸ்தவ வாழ்வும் எனக்குள் செல்வாக்குச் செலுத்தி இருந்தது. பொது உடமைவாதத்துடன் கிறிஸ்தவ சிந்தனைகள் பலவிடங்களில் ஒத்துப் போகின்றன. என்னுடைய பெயரும் எழுத்துக்களும் என்னைக் கிறிஸ்தவனாகவே

**காவலூர் யோவான்**

பலருக்கு இனங்காட்டியது. நான் எழுதிய பல சிறுகதைகள் சிறிஸ்தவத்தின் செல்வாக்குடன் எழுதப்பட்டவை. உதாரணமாக 'உன்னைப்போல் பிறரையும் நேசி', 'போதனைகள் வாழுகின்றன', 'கடவுள் ஒருவனல்ல', 'வருந்துங்கள் மன்னிக்கப் படும்', 'தேடுங்கள் கண்டடைவீர்கள்' 'இயேசு மீண்டும் பிறப்பாரா', 'பக்தி', 'துறவியின் கண்ணீர்'... எனப்பல சிறுகதைகள் கிறிஸ்தவ சிந்தனைகளில் இருந்து கிளம்பியவை.

**கேள்வி :- உங்களது எழுத்தாக்க முறைமை எப்படியானது..?**

**பதில் :-** நான் கற்பனையில் ஒரு போதும் கதை எழுதியதில்லை நான் அழாமல் ஒருபோதும் கதை எழுதியதில்லை. எனது நெஞ்சினை ஒரு விடயம் குத்த வேண்டும் அதனால் நான் வருந்த வேண்டும். அந்தவிடயம் சமூகத்திற்கு எதனையாவது சொல்லவேண்டும். அப்போதுதான் அது கதையாகும். உதாரணத்திற்கு அண்மையில் நான் எழுதிய ஒரு கதை ஒரு துறவியின் கண்ணீர். இது யாழ்ப்பாணத்திலுள்ள புனித யோண் பொஸ்கோ முன்பள்ளியில் இருந்த அருட்சகோதரி அருட்செல்வி பற்றிய எனது அனுபவம்... எனது பேத்தி அங்கு இரண்டு வருடம் படித்து முடித்து வெளியேறும் போது அதற்குப் பொறுப்பாக இருந்த அருட்செல்வி அருட்சகோதரி அவர்களை பேத்தியை ஆசீர்வதிக்கும் படி கேட்டேன். அவர் உளப்பூர்வமாகசெபித்துஆசீர்வதித்தபோது அழுதுவிட்டார். அவரது அழுகை என்னில் தாக்கம் செலுத்தியது. நான் அதனையிட்டு வேனையுடன் வெளியில் நின்ற போது அங்கு வந்த ஒருவர் அவர் அழுத




திற்குக் காரணம் அவர் துறவி. தனக்குப் பிள்ளைகள் இல்லை என்ற தாக்கத்தில் அழுதிருப்பார் என்று கூறியது எனது மனதினை மிகவும் புண்படுத்தியது. அப்பளுக்கற்ற சேவை செய்த அந்தத் துறவி தனது பணியின் நிறைவையிட்டு சிந்திய ஆனந்தக் கண்ணீராக அது இருந்திருக்கலாம். அல்லது இரண்டு வருடங்களாகக் கற்பித்த அந்தப்பிள்ளைகள் இனி வரமாட்டார்கள் என்ற பிரிவுத்துயராக இருக்கலாம்.. எத்தனையோ மாணவர்களை அவர்கள் உருவாக்கியவர்கள்.. அதனை மிகவும் மலினமாக நோக்கிய பார்வை என்னைப் பாதித்தது. அதனால் அதனைக் கதையாக எழுதினேன் அந்தச் சிறுகதையானது பலராலும் பாராட்டப்பட்டது. எனவே ஒரு படைப்பாளனின் இதயத்தினை கூடுதலாக நெருடுகின்ற சம்பவங்களே அவனது படைப்புக்களாக வெளிவரும்என்பது இலக்கியநியமம். எனது அனுபவத்தில் மலையக வாழ்க்கை, நிலாவெளி வாழ்க்கை என்பவற்றோடு இனப்பிரச் சினையில் இரத்தமும் தசையும் நிறைந்த சம்பவங்களும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நமது சகோதரர்களின் உயிராயுதத் தியாகங்களும் அதனை விட நான் சந்தித்த வறுமை என்ற நெருப்பாற்றுப் பயணங்களுமே எனது மனதைவெகுவாகப் பாதித்திருந்தன அவைகளையே நான் இலக்கியமாக்கியுள்ளேன். ஆனால் களங்களையும் பெயர்களையும் நான் மாற்றித்தான் படைப்புக்களை எழுதினேன்.

என் மனதினைக் குத்தாத எதையும் நான் எழுதவில்லை என்பது மட்டுமன்றி.. மனதைக்குத்திய விடயம் எதனையும் நான் உடனேயும் எழுதுவதில்லை.அது என்னுடைய மனதுக்குள் கிடக்கும். கிடந்து கிடந்து அவியும். அதுக்கான பாத்திரங்கள், களங்கள் மொழியாட்சி எல்லாம் மனதில் படிப்படியாக உருவாகி 'இனி எழுதலாம்' 'என மனம் தூண்டும் அதற்குப்பிறகுதான் நான் எழுதத்தொடங்குவேன். அந்தச் சிந்தனைக் காலத்திற்குள் எனக்குள் அந்தக் கதை எதைச் சொல்லப்போகின்றது. இதனால் சமூகத்திற்கு எதை சொல்லப்போகின்றேன் என்பதெல்லாம் மார்க்ஸிய சிந்தனைகளோடு எனக்குள் கிடந்து உருவம் பெற்ற பின்னரே சிறுகதையாக உருவமெடுக்கும் இப்படியான ஒரு படைப்பொழுங்குஎல்லாப் படைப்பாளிகளிடமும் இருக்குமென்று நினைக்கின்றேன்

**கேள்வி:-நீங்கள் எழுதிய படைப்புக்களால் பாதிக்கப்பட்டதுண்டா..?**

**பதில்:-** நான் உண்மையில்லாத எதனையும் எழுதியதில்லை. அதனால் அதிக சவால்களை எதிர்கொண்டிருக்கின்றேன். என்னுடைய முதலாவது நாவல் 'வரலாறு அவளைத் தோற்று விட்டது' நான் நுவரெலியாவில் பூண்டுலோயாவில் இருக்கும் போது எழுதியது. அது ஒரு உண்மைக்கதை. அது மலையகத்தில் நடந்த ஒரு உண்மைக்கதை..அங்கு இருந்த அரசியல் செல்வாக்குடைய துரை ஒருவன், ஒரு ஏழைப் பிள்ளையை கற்பழிச்சுக் கொன்று விட்டான். அந்த சோகத்தில் அதன் தாயும் இறந்துவிட்டாள். நியாயம் கேட்கப் போன சகோதரனை ஜீப்பினால ஏற்றிக் கொன்றுவிட்டார்கள். நான் அப்போது ஒரு பொலிஸ் அதிகாரியுடன் ஒரே அறையில் இருந்த காரணத்தினால் அவர்கள் செய்த சதி எல்லாம் எனக்குத் தெரிந்தது. நானும் ஒரு ஏழைக்குடும்பத்தில் இருந்து வந்ததனால் அந்த ஏழைக் குடும்பத்திற்கு நடந்த அநியாயத்தினை என்னால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. அதனைநாவலாக எழுதி வீரகேசரிக்கு அனுப்பியபோது,அது தெரிவுசெய்யப்பட்டது. ஆனால் அது உண்மைக்கதை என்று அறிந்த அவர்கள் அதற்கான பொறுப்பினை நானே ஏற்கிறேன் என வழக்கறிஞருக்கு முன்பாக ஒப்பமிட வேண்டுமென்றார்கள். நான் ஓமென்று சொல்லி ஒப்பமிட்டேன். நாவல் வெளிவரும் சூழலில் துரையின் செயலாளர் அதனை அறிந்து பாடசாலைக்கு வந்து என்னை எச்சரித்தார். 'இந்தக்கதை வெளி வரக்கூடாது' என்று கண்டிப்பாக எச்சரித்தார். நான் விடாமல் காரணம் கேட்டு வாதிட்டேன். தண்ணி இல்லாத காட்டுக்கு இடமாற்றம் செய்வோம் என்றார்கள். நான் எதற்கும் பயப்படவில்லை என்னை உடனே மூதூருக்கு இடமாற்றம் செய்தார்கள் தினமும் 15 மைல் தூரம் கடலில் பய ணம் செய்து பணிக்குச் செல்லவேண்டும் நான் எதனையும் மறுக்கவில்லை மகிழ்ச்சியாகத்தான் பணிக்கு சென்றுவந்தேன். ஒவ்வொரு பணிக்களங்களும் எனக்கான கதைக்கருக்களை அதிகமாகத் தந்தன.

**கேள்வி :- தங்களது இலக்கியப்பங்களிப்புக்காக தங்களுக்குக் கிடைத்த கௌரவங்கள்.. விருதுகள்..?**

**பதில் :-** இலக்கியத்துறையில் 24 பரிசில்களைப் பெற்றுள்ளேன். தவிரவும் 2016 இல் லண்டன் புதினப்பத்திரிகை நடத்திய அனைத்துலகச் சிறுகதைப்போட்டியில் முதற்பரிசைப் பெற்றுள்ளேன். ஏழுக்கும் மேற்பட்ட கௌரவங்களைப்பெற்றுள்ளேன். கலாபூஷண விருது முதமைச்சர் விருது உட்பட ஆறு விருதுகளைப் பெற்றுள்ளேன் இவற்றில் 2013 இல் இந்தியா நாமக்கல் கு.சின்னப்பாரதி இலக்கிய அறக்கட்டளை விருதினையும் பெற்றுள்ளேன். எல்லாவற்றையும் விட தமிழ்மொழியும் இலக்கியமும் என்ற தரம் எட்டு மாணவர்களுக்கான பாடநூலில் எனது 'எழுதப்படாத வரலாறு' என்ற சிறு கதை சேர்க்கப்பட்டிருந்தது மிகப்பெரிய கௌரவமாகும்.

# யாழ் மறை மாவட்டத்தின் முன்மாதிரிகையான ஒரு பொது நிலை விசுவாசி

**அருட்பணி எம்.டேவிட்**

**முகவுரை**

இது அழைத்தலின் ஆண்டு. இந்த ஆண்டில் நாம் சிறப்பான முறையில் பொது நிலையினரின் அழைத்தல் பற்றி சிந்திக்க யாழ் ஆயரினால் அழைக்கப்பட்டுள்ளோம். இந்த ஆண்டில் பொதுநிலையினரின் வாழ்வும் பணியும் பற்றி ஆழமான முறையில் சிந்திக்கின்ற வேளையில் திருவாளர் அகஸ்ரின் ஆசிரியரின் வாழ்வை பற்றி சிந்திக்கும்போது அவரின் வாழ்வானது ஒரு சிறந்த பொது நிலை வாழ்வுக்கு ஓர் முன்னுதாரணம் என்றால் அது மிகையல்ல.

**இவர் ஒரு சிறந்த பங்கு மகன்**

ஒரு பங்காக இருந்தாலும் சரி மறைமாவட்டமாக இருந்தாலும் சரி அதன் வளர்ச்சியானது எந்தளவு முதிர்சியுள்ள பொதுநிலையினரைக் கொண்டுள்ளது என்பதில் தான் தங்கியுள்ளது. பொதுநிலையினரின் ஆண்டைப்பற்றி நம் மறைமாவட்ட ஆயர் குறிப்பிடுகையில் அவர் அடிக்கடி குறிப்பிடும் விடயம் "திருஅவையில் இருக்கின்ற மிகச்சிறிய தொகையான குருக்கள் துறவியருடைய பங்களிப்பை விட திருஅவையில் இருக்கின்ற மிகப்பெரிய தொகையிலான பொது நிலை அங்கத்தவர்களிலேயே திருஅவையின் வளர்ச்சி மிகவும் தங்கியுள்ளது". அந்தவகையில்திருவாளர் A.S. அகஸ்ரின் அவர்கள் யாழ் அடைக்கல அன்னை ஆலயத்தில் எல்லாச் செயற்பாட்டிலும் தன்னுடைய பங்களிப்பைச் செய்து பங்குத்தந்தையருக்கு மிகவும் உறுதுணையாக இருந்து வந்துள்ளார். தன் பங்கிற்கு வரும் எல்லாப் பங்குத்தந்தையர்களையும் தன் குடும்ப அங்கத்தவர் போல அன்போடும் பாசத்தோடும் பழகும் பண்புடையவர்.

இவரின் பிரமாணிக்கம் மிக்க பணி கண்டு யாழ் மறை மாவட்டம் இவருடைய பங்குத் திருஅவையில் நற்கருணைப் பணியாளராக ஏற்படுத்தியமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அமலமரித்த தியாகிகள் சபையைச் சேர்ந்த ஒரு குருவானவர் அவரைப் பற்றிக் குறிப்பிடுகையில், "பங்கு நிகழ்வுகளில் உரையாற்றுகின்ற பொழுது அவருடைய உரை தன்னுடைய பங்கை எந்தளவுக்கு முழுமையாக அறிந்திருக்கின்றார் என்பதனையும், எந்தளவுக்கு முழுமையாக ஈடுபாடு கொண்டுள்ளார் என்பதனையும், அந்தப் பங்கின் வளர்ச்சியில் எந்தளவுக்கு ஆர்வம் கொண்டிருக்கின்றார் என்பதனையும் வெளிப்படுத்தும்" என்றார்.

**இவர் ஒரு திருஅவைத் தலைவர் மட்டுமல்ல ஒரு சமூகத் தலைவர்**

யாழ். மறை மாவட்டத்தின் ஒரு முன்னணிப் பொதுநிலையினர் என்ற மட்டில் அவர் சமூகத்திற்கு ஆற்றிய பணி காலத்தால் மறக்க முடியாதது. யாழ். மறைமாவட்டத்தின் பொதுநிலையினர் கழகத்தில் நீண்ட கால உறுப்பினராக இருந்து யாழ். மறைமாவட்டத்தின் சமூகப் பணிகளில் முன் நின்று உழைத்தவர். யாழ். மறைமாவட்டம் இளைஞர்கள் யுவதிகளுக்கான"உயர்கல்விக்கான கத்தோலிக்க மையம் (CCHS) ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அதனால் தொடங்கப்பட்ட ஆங்கில வகுப்புக்களுக்கு அதனுடைய பதிவாளராகவிருந்துபணிசெய்தவர். மறைமாவட்ட பொதுநிலைக் கழகத்தால் முன் னெடுக்கப் படும்எந்தசமூகப்பணியானாலும்சுயவிருப் போடு முன்வந்து அர்பணிப்போடும் செயற்படும் கர்மவீரர்.

**இவர் ஒரு கணித மலை**

இவருடைய இறப்புச் செய்தி கேட்டதும் இவரிடம் படித்த மாணவர்கள் ஒன்றுகூடி ஒருமித்து எழுப்பிய கோசம் "தமிழ் மாணவர்களின் மிகப் பெரும் சொத்தாகிய கணித மலை சாய்ந்துவிட்டது" என்பதாகும். தன் வாழ்நாள் முழுவதிலும் தன் இதயத்திற்கு மிக நெருக்கமாக வைத்திருந்த யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் நீண்ட கால ஆசிரியராக இருந்து கணித பாடத்தைப் புகட்டியவர். தன்னுடைய ஆசிரியத்துவத்தை ஒரு தொழிலாக அல்ல இறைவனால் அவருக்குக் கொடுக்கப்பட்ட ஒரு அழைத்தல் என்பதனை உணர்ந்து வாழ்ந்தவர். William Arthur Ward ஒரு முறை ஆசிரியர் பற்றிக் குறிப்பிடுகையில் சொன்ன அர்த்தமுள்ள வார்த்தைகள்: "The mediocre teacher tells. The good teacher explains. The superior teacher demonstrates. The great teacher inspires." ஒரு சிறந்த ஆசிரியர் மாணவனுக்கு அகத்துாண்டுதல் அளிப்பவர். இவர் கணித பாடம் புகட்டுகின்ற பொழுது அந்தக் கணிதத்தின் ஊடாகவே மாணவர்களுக்கான வாழ்க்கைப் பாடத்தையும் ஊட்டி உயரிய சமூகத் தலைவர்களை உருவாக்கிய அர்ப்பணிப்புள்ள ஆசான். யாழ். புனித பத்திரிசியார்கல்லூரிமுன்னாள்அதிபர் அருட்பணி. ம.ஜெரோ செல்வநாயகம் குறிப்பிடுகையில், "இவர் தன்னுடைய வகுப்பைத் தொடங்குகின்ற பொழுது மாணவர்களுக்கான வாழ்க்கைக் கல்வியை பரிசுத்த வேதாகமத்திலிருந்து மாத்திரமல்ல திருக்குறள் போன்ற நூல்களிலிருந்தும் அறிவுரைகளை மாணவர்களுக்கு அள்ளி வழங்குவதன் மூலம் அவர்களை முழு மனித வளர்ச்சிக்கு இட்டுச்சென்றவர்." என்றார்.


இவர் எங்கு பயணித்தாலும் இவர் பாவித்த துவிச்சக்கர வண்டி இவருடைய எளிமையான வாழ்வுக்கு ஒரு சான்றாகும். எவ்வளவு தான் செல்வம் அவரிடம் இருந்தாலும் அவர் என்றுமே எளிமையாக வாழ்ந்து இயேசுவின் எளிமை வாழ்வுக்குச் சான்று பகர்ந்தவர். தன்னுடைய வாழ்வில் இறுக்கமான ஒழுக்கக் கோட்பாடுகளைக் கொண்டு வாழ்ந்தது மாத்திரமல்ல தன் மாணவர்களையும் வாழத் தூண்டியவர்.

**இவர் ஒரு சிறந்த குடும்பத் தலைவர்**

இவர் உன்னதமான குடும்ப வாழ்வை வாழ்ந்து அதை மற்றவர்களும் வாழக் கற்றுக் கொடுத்தவர். யாழ். மறை மாவட்டத்தினால் நடாத்தப்படும் திருமண தயாரிப்பு வகுப்புக்களில் இவரும் இவருடைய மனைவியும் திருமணத்தின் கோட்பாடுகளை வெறும் திருஅவையின் படிப்பினைகளாக மாத்திரமல்ல தங்கள் வாழ்வின் அனுபவங்களாகவும் கற்றுக் கொடுத்தவர்கள். அவருடைய வாழ்வின் பகிர்தல்கள் திருமணம் செய்யப் போகின்ற பல இளம் உள்ளங்களுக்கு தாங்களும் ஒரு உயரிய திருமண வாழ்வை வாழவேண்டும் என்கின்ற உத்வேகத்தை அளித்திருக்கின் றது. இன்றைய உலகக் கோட்பாடுகளுக்கு மேலாக சாட்சியங்களையே அதிகம் விரும்புகின்றது. எனவே இவர்கள் இருவரும் திருமணத்தில் கொடுத்த வாக்குறுதிகளுக்கும் திருஅவையின் திருமணம் பற்றிய படிப்பினைக்கும் ஏற்றவகையில் தங்களால் இயன்றளவு வாழ்ந்திருக்கின்றோம் என்பதனை அனுபவப் பகிர்வுகள் ஊடாக மற்றவர்களுக்கு வழங்கியவை பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். இவர் மரணித்த ஒரு சிறிய காலப்பகுதிக்குள்ளேயே இவருடைய மனைவியும் இறைபதம் அடைந்தமை இவர்கள் எந்த அளவுக்குத் தங்கள் திருமண வாழ்வை அர்ப்பணிப்போடு வாழ்ந்தார்கள் என்பதற்கு சாட்சியமாகும்.

**1993 ஆம் ஆண்டு யாழ் மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டில் திருவாளர் அகஸ்ரின்**

யாழ். மறை மாவட்டத்தில் 1993 ஆம் ஆண்டு நடைபெற்ற மேய்ப்புப்பணி மாநாட்டில் திருவாளர் A.S.அகஸ்ரின் அவர்கள் அளித்த பங்களிப்பு காலத்தால் அழியாத ஒன்று. திருஅவையில் மிகவும் அக்கறை கொண்ட முதிர்ச்சியுள்ள பொதுநிலைக் கிறிஸ்தவர் என்ற தளத்தில் உறுதியாக நின்று கொண்டு பொதுநிலையினரின் உரிமைகளையும் கடமைகளையும் பற்றி மிகவும் உறுதிபடப் பேசியது மாத்திரமல்ல குருக்களைப் பற்றியும் பேசுகின்ற பொழுது அவர்களுடைய குறை நிறைகளை அன்போடும் பாசத்தோடும் சுட்டிக்காட்டிய ஒருவராக அவர் திகழ்ந்தார். குருக்களுடைய குறை நிறைகளை சுட்டிக் காட்டுவதற்கு அவர் ஒருபொழுதும் தயங்கியவரல்ல. ஆனால் அதைச் சுட்டிக்காட்டுகின்ற தொனியும், முறையும் போற்றப்பட வேண்டியதொன்று. பொதுநிலையினர் வேறு திருநிலையினர் வேறு என்ற இரண்டு தளங்களில் அல்ல, மாறாக இருவரும் சேர்ந்ததுதான் திருஅவை என்ற உறுதியான கோட்பாட்டில் இருந்து இவ் இருவரையும் இணைத்து திருஅவையை முன்னகர்த்துகின்ற ஒருவராகத் திகழ்ந்தார்.



ஆசிரியர் திரு A.S. அகஸ்ரின்

**முடிவுரை**

இந்தகைய ஒரு சிறந்த பொதுநிலையினராக வாழ்ந்த திருவாளர் A.S. அகஸ்ரின்

## நீந்தார் புகழுரை

அவர்கள் யாழ். மறை மாவட்டத்திற்கு இறைவனால் கொடுக்கப்பட்ட மிகப் பெரும் சொத்தாகும். எனவே, இவர் வாழ்ந்த வாழ்வு, இவர் விட்டுச்சென்ற படிப்பினைகள், விழுமியங்கள் எல்லாவற்றுக்காகவும் யாழ். மறை மாவட்டம் இறைவனுக்கு நன்றி கூறுகின்றது. அதே வேளையில் இவருடைய ஆன்மாவிற்கு இறைவன் ஆன்மீக இளைப்பாற்றியைக் கொடுத்தருள வேண்டுமென்று தொடர்ந்தும் நாங்கள் இறைவனை மன்றாடுகின்றோம்.

---


# போதுமிந்தப் புலமைப் பரிசில்

**-பப்சி மரியதாஸ்**

உலகிலேயே மகிழ்ச்சிகரமான குழந்தைகளாக பின்லாந்தின் பிள்ளைகள் காணப்படுகின்றார்கள். கல்வி அடைவுகளில் உலகில் முதலிடமும் அவர்களுக்கே உரியது என ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. இதன் அர்த்தம் மகிழ்ச்சிகரமாக குழந்தைகள் அதிக கல்வி சுமையை பெற்றுக்கொள்கிறார்கள். என்பதாகும். அதாவது "மகிழ்ச்சிகரமான கற்றல்" எனும் எண்ணக்கரு வலுவானதாக வெளிப்படுத்தப்படுகிறது.

பிள்ளைகளுக்கு "ஓர் அழகிய சிறுபராயத்தை வழங்குங்கள்" என்பது UNICEF அமைப்பின் வேண்டு கோளாகும். உலகின் பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும் விடுக்கப்படும் அழைப்பே இதுவாகும். மகிழ்வான உள்ளத்தை, சுதந்திரமான செயற்பாட்டை மாணவர் மையக் கல்வியை வழங்குவதே பொருத்தமானது என இன் றைய கல்விப்புலம் சார்ந்தோரும், கல்வி உளவியலாளர்களும் ஏனைய கல்வி நிபுணர்களும் வலியுறுத்தி வரும் பின்னணியில் எமது பாடசாலைகளிலும், வீட்டிலும், நாட்டிலும் எமது இளம் சிறார்களுக்கு வழங்கப்படும் கல்வி பொருத்தப்பாடானதா? நடைமுறைக்கு இசைவானதா? என்ற கேள்வி எழுப்படவேண்டியது அவசியம்.


போட்டி முறைக்கல்வி ஆபத்தானது என்பது கல்வியியலாளர்கள் கருத்தாகும். போட்டி முறைக்கல்வியூடாக ஒரு சாறார் வெற்றியை நோக்கி வீறு நடைபோடுகின்றார். மறு சாறார் போட்டி போட முடியாத தம் இயலா நிலையில் கணிப்பைப் பெற மாற்று வழியை நாடுகின்றார். கணிப்புத்தேவை என்பது ஒவ்வொரு மனித உயிருக்கும் தேவையானது என்பதை அறிந்த கொண்டுள்ள நாம் நடைமுறையில் அவற்றை எமது மாணவச் செல்வங்களுக்கு வழங்க முனைவதில்லை.




போட்டி முறைக்கல்வியால் வெற்றி பெற்றோரை வாழ்த்தி கௌரவிக்கும் சமூகம் தேவைக்கு மேலதிக புகழ்ச் சியை அள்ளி வழங்கி மாணவனைத் தன்னைப் பற்றிய மிகை மதிப்பீடு கொள்ளச் செய்கிறது. இந்நிலை வெற்றி பெற்றோனுக்கும் ஆரோக்கியமானதல்ல தோல்வியுற்றோன் சமூகம் புறக்கணிக்கும் நிலைக்கு தள்ளப்பட வெற்றி பெற்றோன் மிகை மதிப்புக்குள்ளாகின்றான்.

இவ்விரண்டிற்கும் இடையில் சிக்கிக் கொள்ளும் எம் இளம் சமூகத்தை சூழ்ந்து ஆக்கிரமித்துக் கொள்ளும் தமிழ், வணிக, சினிமாக்கள் அவர்களைப் பாதகமான பாதைக்கு இட்டுச் செல்கின்றனவழிப் பறியும், கொள்ளையும், வாள் வெட்டும்வீரமெனக் கொண்டு எம் பிள்ளைகள் வீணாகிப் போகின்றனர்.

எனவே போட்டி முறைக கல்வியை நீக்க முதலில் புலமைப் பரிசில் பரீட்சைக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் நீக்கப்பட வேண்டும். இதற்கான ஓர் அடியை அரசு எடுத்து வைத்துள்ளதாக இவ்வாரப் பத்திரிகைச் செய்திகள் வெளிப்படுத்துகின்றன. தேசிய மட்டத்தில் பரீட்சை புள்ளிகளை வெளியிடும் தரப்படுத்துகையும் நிறுத்தப் போவதாக அரசு அறிவிப்பு வெளியாகியுள்ளது. இத்தகைய நன்முயற்சியைக் "கல்விச் சமூகம்" தடைசெய்யாமல் ஏற்றுக்கொண்டு ஆரோக்கியமானதோர் மாணவ சமூகத்தை உருவாக்க முன்வர வேண்டும்




# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி. செ. அன்புராசா அமதி**

*(சுதா யாழ்ப்பாணம்)*

**கேள்வி: கஸ்ரப்படாமல் இருப்பதற்கு ஒரு வழி சொல்லுங்கள் நாதா?**

**பதில்:** கஸ்ரப்படாமல் இருக்க ஒரு கதிரை வாங்கிக்கொள்ளுங்கள், சுதா! நம்மூர் வீதியில் நடந்த இந்த சம்பவத்தைப் கவனியுங்கள். வீதிவழியே, "நீங்கள் இனிமேல் ஆயுள்பூராகவும் சும்மா இருந்து சாப்பிட வேண்டும் என்றால், 650 ரூபாவை மட்டும் முதலிடுங்கள்!" என ஒலிபெருக்கியில் ஒருவன் அறிவித்தபடி போய்க்கொண்டிருந்தான். '650 ரூபாவைக் கொடுத்தால் வாழ்நாள் பூராகவும் சும்மா இருந்து சாப்பிட முடியும் என்கிறானே! அந்த அதிசயத்தை நாமும் அனுபவிப்போம்!' என நினைத்த நண்பன் ஒருவன் வீட்டைவிட்டு வெளியே வந்து பார்க்கிறான். என்ன ஆச்சரியம்! ஒரு வியாபாரி கதிரைகளை விற்றுக்கொண்டு போய்க்கொண்டிருந்தானாம்! அதனால்தான் சுதா, கஸ்ரப்படாமல் இருக்க ஒரு கதிரை வாங்கிக்கொள்ளுங்கள் என்றேன்.

(உதயன், பேசாலை)

**கே: பேரினவாதத்தின் நிகழ்ச்சி நிரல்படி தான் எல்லாம் நடக்கிறது என நான் நினைக்கிறேன். பேராயர் மல்கம் ரஞ்சித், அத்துரலிய ரத்ன தேரர் உட்பட! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

**ப:** உதயன், 'பேரினவாதத்தின் நிகழ்ச்சி நிரல்படிதான் எல்லாம் நடக்கிறது' என நீங்கள் நினைப்பது நியாயமானது என்றே நானும் நினைக்கிறேன்!

*(வசந்தி, முல்லைத்தீவு)*

**கே: உயிர்த்த ஞாயிறு பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டுகள் மிகப் பயங்கரமானவை எனச் சொல்லப்படுகின்றதே! உண்மை தானா?**

**ப:** அது உண்மைதான் வசந்தி! மிகச் சக்திவாய்ந்த குண்டு என்று சொல்லப்படுகிறது. அதன் பெயர் 'பேயின் தாய்' (Mother of Satan) என்பதாகும். இவ்வெடிகுண்டு ஒருமுறைதான் வெடிக்கும். அத்துடன் இது முடிந்துவிடும்! ஆனால், இதேபோன்ற இன்னுமொரு வெடிகுண்டு இருக்கிறது. அது, நம்மத்தியில் உள்ள புறணிபேசுதல், கதைகட்டுதல், பொய்யுரைத்தல் போன்ற வெடிகுண்டுகளாகும்! இதனைப் பலரும் இன்று பரவலாகப் பயன்படுத்துவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது! அவ்வெடிகுண்டுகளைப்போல இவ்வெடிகுண்டுகளும் பயங்கரமானவைதான்! ஆனால், இவை இரண்டுக்கும் அடிப்படையில் ஒரு வித்தியாசம் இருக்கிறது! முன்னையது ஆளைக் கொல்லும், பின்னையது ஆளுமையைக் கொல்லும்! முதலாவது உயிரைக்கொல்லும், இரண்டாவது உறவைக் கொல்லும்!

*(மல்லிகா, முல்லைத்தீவு)*

**கே: 'ஆசியாவின் அதிசயம்' எனச் சிலர் இலங்கையைச் சொல்கின்றார்களே! அப்படி என்ன அதிசயம் இலங்கையில் இருக்கின்றது?**

**ப:** இந்நாட்டில் ஒரே நேரத்தில் இரு பிரதம மந்திரிகளும், இரு அமைச்சரவையும் இருந்தது 'ஆசியாவின் அதிசயம்', ஏன் உலக அதிசயம் என ஒருதடவை இதேபகுதியில் குறிப்பிட்டிருந்தேன். இப்போது, ஆண்டவரைக் காக்க ஆமிக்காரன் காவல் என்பதாக நிலை மாறிவிட்டது! எது எப்படியோ, எல்லா அதிசயங்களும் நம் நாட்டில் நடைபெறுவதால் நாட்டுக்குத்தானே பெருமை மல்லிகா!?

*(வாசுகி, மன்னார்)*

**கே : தமிழின அழிப்பின் ஓர் உச்சமாகவே முள்ளிவாக்கால் பேரவலம் திகழ்கின்றது. ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல்களோடு தமிழின அழிப்பின் விசாரணைகள் மறைக்கப்பட்டு விடுமா அல்லது குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்களா?**

**ப:** வாசுகி, தற்போதைய நிலைமையில் குற்றவாளியும், சாட்சியும், நீதிபதியும் ஒருவர்தான்! அதாவது, குற்றத்தைச் செய்தவரும் அக்குற்றவாளிக்குச் சாட்சி சொல்பவரும் அக்குற்றவாளிக்கு நீதி வழங்குபவரும் ஒருவரே! அந்த ஒருவர் இலங்கை அரசு! நிலைமை இப்படியிருக்கையில், நீதி எவ்வாறு கிடைக்கும்? எப்படிக் கிடைக்க முடியும்? என எண்ணிப் பாருங்கள் வாசுகி! இக்கருத்தை சில ஆண்டுகளின் முன் வெளிப்படுத்தியிருந்தது பெருமதிப்புக்குரிய மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள்தான்!

*(செல்வி, யாழ்ப்பாணம்)*

**கே: நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ண தேரர் அவர்கள் உண்ணாவிரதத்தின் மூலம் முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளின் ஆளுநர், அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்ய வைத்தது குறித்து என்ன கருதுகின்றீர்கள்?**

**ப:** செல்வி, இப்பேர்ப்பட்ட செயற்பாடு பேரினவாதத் தாண்டவத்தின் இன்னுமொரு வடிவம்!

*(றெஜி, யாழ்ப்பாணம்)*

**கே: 'இல்லறமல்லது நல்லறமன்று' என ஒருசாராரும் 'சம்சார சாகரம் துக்கம்' என இன்னொரு சாராரும் கூறிக்கொள்கிறார்கள் மேற்சொன்ன இரு கருத்துக்களும் இரு துருவங்களாகத் தென்படுகின்றன. இவற்றில் எது உண்மை?**

**ப:** 'நல்ல குடும்பம் அமைத்தவன் முதல் பழமொழியையும் அல்லாதவன் இரண்டாவதையும் சொல்லித் தொலைத்தார்கள்!' என்ற கவியரசு கண்ணதாசனின் கருத்து உங்கள் கேள்விக்குப் பதிலாகட்டும் றெஜி!

*(மலர், புதுக்குடியிருப்பு)*

**கே: இப்போதெல்லாம் பென்னம் பெரிய வீடுகளைக் கட்டி சின்னஞ்சிறிய குடும்பமே வாழ்கின்றது. ஒரு சிறிய குடும்பம் வாழ்வதற்கு ஏன் பென்னம் பெரிய வீடு?**

**ப:** மலர், 'சிறுகக் கட்டிப் பெருக வாழ்' என நம்முன்னோர்கள் சொல்லிவைத்தார்கள். இப்போது, 'பெருகக் கட்டி சிறுக வாழ்' என்றாகிவிட்டது. அப்போது, எளிமையாக வாழ்ந்தால் எழிலோடு வாழலாம், மனவுறுதியோடு வாழ்ந்தால் மனநிறைவோடு வாழலாம் என எண்ணினார்கள். இப்போது, ஆடம்பரமாக வாழ்ந்தால்தான் ஆனந்தமாக வாழலாம் என நினைக்கிறார்கள்! அதனால்தான், இக்காலத்தில் விரலுக்கு விஞ்சிய வீக்கத்தை விரும்புகிறார்கள்!

*(நிக்சன், மன்னார்)*

**கே: இக்காலத்துப் பிள்ளைகள் முற்காலத்துப்பிள்ளைகளைவிட அறிவுத் திறன் பெற்றவர்களாக இருக்கின்றார்கள் என்பதை ஏற்றுக் கொள்ளலாமா?**

**ப:** முற்காலத்தைவிட இக்காலத்துப் பிள்ளைகள் அறிவுத்திறன் பெற்றவர்களாக இருப்பதற்கான காரணம் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி என்றுதான் கூற வேண்டும். அத்துடன் கற்பதற்கான வசதி வாய்ப்புக்கள், வளங்கள் இன்றைய பிள்ளைகளுக்கு முன்னரைவிட இப்போது மிகமிக அதிகமாகக் கிடைப்பதும் இன்னுமொரு காரணம். அதனால், இக்காலத்துப் பிள்ளைகள் அதிக அறிவுத்திறன் பெற்றவர்களாக இருக்கிறார்கள் என்ற கருத்தை ஓரளவிற்கு ஏற்றுக்கொள்ளலாம். ஆயினும், அண்மையில் ஒரு பரீட்சையில் பாடசாலை மாணவன் ஒருவன் அளித்த பதில் மேற்சொன்ன கருத்தை வெவ்வேறு கோணங்களில் தெளிவுபடுத்தலாம்! மலம் வெளியேற்றப்படும் மனித உடல் உறுப்பை வரைபடம் ஒன்றின் ஊடாக குறித்துக் காட்டிவிட்டு இரண்டு கேள்விகள் கேட்கப்பட்டிருந்தன.

1) கேள்வி: "மேற்காணும் உடல் உறுப்பு வெளியேற்றும் பொருளைப் பெயரிடுக?" பதில்: 'கக்கா' என எழுதியிருந்தான் ஒரு மாணவன்.

2) கேள்வி, "உன் கருத்துப்படி மேற்காணும் உறுப்பு நன்றாக செயற்பட ஒரு வர் என்ன செய்யவேண்டும்?" என்பதற்கு அதே மாணவன், 'நன்றாக முக்கவேண்டும்' எனக் குறிப்பிட்டிருந்தான்! இக்காலப் பிள்ளைகளில் அறிவுத்திறனை நீங்களே கணித்துக்கொள்ளுங்கள் நிக்சன்!?

*(விழி, முல்லைத்தீவு)*

**கே: அவ்வப்போது நடைபெறும் மதப் பிணக்குகள் தமிழர்களின் ஒற்றுமையைப் பிளவுபடுத்தும் ஒன்றாகக் கொள்ளலாமா?**

**ப:** விழி, நீங்கள் விழிப்பாய் இருக்கிறீர்கள் என்பது இக்கேள்வியிலிருந்து தெரிகிறது. துல்லியமான கணிப்பு! தமிழர்களின் ஒற்றுமையைப் பிளவுபடுத்துவதற்கு பல வழிகளைப் கையாண்டவர்கள் இப்போது மதத்தை கையிலெடுத்து அதற்கு மதம் ஊட்டுகிறார்கள். தமிழர்களைப் பொறுத்தவரை சமயத்தை அறிவுபூர்வமாக நோக்குவதைப் பார்க்கிலும் உணர்வுபூர்வமாக நோக்குகிற நிலைமையே நிலவுகிறது! அதனால், இப்போது தங்கள் விளையாட்டுக்கு இதனைத் துரும்பாகப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள் சிலர்! இதனைப் புரிந்துகொள்ளாமல், எங்கள் நீண்ட நெடிய போராட்ட வரலாறுகளையும் பண்பாட்டு வாழ்க்கை முறைகளையும் புறந்தள்ளிவிட்டு சில புத்தி ஜிவிகள்கூட இப்பொறிக்குள் சிக்கியிருக்கிறார்கள் என்பதுதான் வேதனை. அந்தவகையில் தந்தை சா.ஜே.வே.செல்வநாயகம் சொன்னது போல 'தமிழர்களை இனிக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும்!' என்ற தீர்க்கதரிசனக் கூற்று சரியானதே! மேலும், போகப் போக தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும் என்பது சரி, ஆனால், தமிழர்களை எந்தக் கடவுள் அதாவது எந்தன் கடவுளா, உந்தன் கடவுளா, நந்தன் கடவுளா அல்லது கந்தன் கடவுளா காப்பாற்றுவார் என்பதிலும் இனி இழுபறிகள் ஏற்பட்டு அதுவே பெரும் வரமாக, மன்னிக்கவும், கலவரமாக மாறலாம்!

*(அருள், மானிப்பாய்)*

**கே: 'கடி ஜோக்' ஒன்று தாருங்களேன்!**

**ப:** "உடம்பெல்லாம் வலி சேர்!" என ஒருவர் வந்து மருத்துவரிடம் கூறுகிறார். 'இந்தத் தைலத்த உங்கட மனைவியிடம் கொடுத்து தேய்த்துவிடச் சொல்லுங்க!' என்கிறார் மருத்துவர். "ஏன் அவவிடம்?" எனக் கேட்கிறார் அந்நபர். 'இல்ல, எங்க எங்க அடிவிழுந்தது என்று அவவுக்குத்தானே தெரியும்!' என்கிறார் மருத்துவர்!

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

**உங்கள் கேள்விகளை, பெயர், முகவரியுடன் குறிப்பிட்டு, 'என் கேள்விக்கென்ன பதில்', 'அமைதித்தென்றல்', உண்ணாப்புலவு, முல்லைத்தீவு என்ற முகவரிக்கோ, anpuomi1970@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ, அல்லது 0778 648 548 என்ற எண்ணுக்கு sms, viber அல்லது whatsupக்கோ அனுப்பி வைக்கலாம்.**

# உளப்பாதிப்பு அனுபவங்களும்....

*(5ம் பக்கத் தொடர்ச்சி)*

ஈ.ஆன்மீக அனுபவங்கள்: சிலரது கடவுள் நம்பிக்கை ஆழப்படும். இதனால் இறைவனையே அடிக்கடி நாடி ஆறுதல் பெறுவர். வேறு சிலர் கடவுளைக் கைவிடு வர்.

கோயிலுக்குச் செல்வதை நிறுத்துவர். இத்துன்ப நிலைக்குக் கடவுளே காரணம் என்ற தவறான சிந்தனையே.

**உ. உடல் வெளிப்பாடுகள்:**

இது மூளையின் சில பகுதிக ளைப் பாதிப்பதால் வழமைபோன்று இயங்குவதற்குத் தடையாகிவிடுகின்றது. பசியின்மை அல்லது அதிகம் உண்ணுதல் காணப்படும். மேலும் நித்திரையின்மையும் தொடர்ச்சியான களைப்பும் காணப்படும். விளக்கமுடியாத உடல் வலிகள் உடல் உள இறுக்கம் காணப்படுவதுமுண்டு. வாந்தி, தலைவலி, ஒழுங்கற்ற இதயத்துடிப்பு, வேகமான நாடித்துடிப்பு, கடுமையாக வியர்த்தல், தசையிறுக்கம், வயிற்று வலி, வயிற்றோட்டம் அல்லது மலச்சிக்கல் என்பன காணப்படும்.

**நிறைவாக:**

மேலுள்ள அறிகுறிகள் இத்தகைய பாதிப்புக்கு உள்ளானோரில் காணப்படும் சாதாரணமான அறிகுறிகளாகும். இவை ஒருவரது உளநலமின்மையின் அடையாளம் அல்ல கடுமையான மனச்சோர்வின் (Manic Depression) அடையாளம் அல்ல என்பதை உணர்தல் முக்கியமானது. இவற்றை முக்கியமானவையாகக் கருத்திலெடுத்துச் செயற்பட வேண்டும். சில சந்தர்ப்பங்களில் இதன் அறிகுறிகள் மாதங்கள் அல்லது வருடங்களின் பின்னரே வெளிப்படுவதுண்டு. அந்த வகையில் அடையாளம் காண்பது சுலபமல்ல. ஒரு மாதத்திற்கு மேல் இந்த அறிகுறிகள் காணப்படின் உள ஆற்றுப்படுத்துநரின் சேவையை நாடவேண்டும். இவை ஆகக்கூடியது இரண்டு மாதங்களுள் மறைந்துவிடுபவை. இதன் பாதிப்பிலிருந்து விடுபட முயற்சி மேற்கொள்ளாவிடில் அது தீர்மானம் எடுத்தல் திறன், இயல்பாக நடத்தல் என்பனவற்றைப் பாதிக்கும்.

தற்போது ஏற்பட்டதுபோன்று ஏனைய கடந்த காலப் பாதிப்பு அனுபவங்கள் கிளர்ந்தெழுந்து நிலைகுலையச் செய்யின், மனநோய் ஏற்பட்டுவிட்டது போன்று தோன்றும். ஆனால் அது உளநோயல்ல. ஆனால் இவற்றிற்கு உளநல உதவி நாடாவிடில் கடும் உளநோயினை ஏற்படுத்திவிடும். உளநோய் நிலையடைந்திருப்பின் உள மருத்துவரை நாடவேண்டும்.

# 200 ஆம் ஆண்டை நோக்கி பயணிக்கும் போர்டோவின் திருக்குடும்ப சபைச் சகோதரிகள்



திருக்குடும்ப சபை 200 ஆம் ஆண்டை நோக்கி பயணிக்கும் இவ்வேளையில் அச்சபையின் வரலாற்றுத் தடங்கள் தொடராக வெளிவரவுள்ளது...

அருட்சகோதரி லுமினா போல்ராஜா
திருக்குடும்பக் கன்னியர் சபை

போர்டோவின் திருக்குடும்ப சபை 1820ல் ஐரோப்பாவிலுள்ள பிரான்ஸ் தேசத்தில் வித்திடப்பட்டு ஆழமாக வேரூன்றி, பல் திசையும் கிளைகள் பரப்பி பாரிய விருட்சமாக ஆசியா, ஆபிரிக்கா, வடஅமெரிக்கா, தென்அமெரிக்கா என்று விரிந்து, வளர்ந்து கனிகொடுத்து வருகின்றது. 1820ல் தடம் பதித்த எம் சபை 2020ல் தன் 200வது ஆண்டை நன்றியுணர்வுகளுடன் எதிர்நோக்கக்காத்திருக்கின்றது. இதை நினைவு கூரும் நகர்வுகளில் ஒன்றாக எம் சபையின் வரலாற்றை உங்களோடு பகிர்வது சாலப் பொருத்தமானதாகும்.

**ஜூபிலி ஆண்டு அறிமுகம்**

மானிட வரலாற்றிலும் மீட்பின் வரலாற்றிலும் புரட்சிகள் வெடிப்பதும், குழப்பங்கள் ஏற்படுவதும் சிதறுண்டு பிரிந்து ஓடுவதும் புதியவையல்ல. இவை காலத்துக்குக் காலம் அரசியல், பொருளாதாரம், மதம், மொழி, நிலம் என்று பல்வேறு வடிவங்களில் சிறிதாகவும், பெரிதாகவும் உருவெடுப்பதும் நிஜங்களாகும். இவை மத்தியில் படைத்த பரம்பொருளாம் இறைவனின் தலையீடு உயர்ந்து நின்று, இவற்றை சீர்செய்ய காலத்துக்குக் காலம் அரசர்கள், நீதித் தலைவர்கள், இறைவாக்கினஉகள், நல்ல மனிதர்களைத் தேஉந்தெடுத்து, தன் நோக்கை நிறைவு செய்யும் உன்னத கருவிகளாகப் பயன்படுத்தி வருவதும் கண்கூடான உண்மைகளாகும்.

இந்த வரிசையிலே மாநகராம் பிரான்சின் வரலாற்றிலே புரட்சி வெடித்த போது நல்லவராக மண்ணில் பூத்த வண. பீற்ற பியன்வெனு, புரட்சியின் விளைவாக ஏற்பட்ட பாதிப்புக்களுக்குத் தன்னுணர்வ கொண்டார். செபத்தில் இறைசித்தத்தை உய்த்துணர்ந்தார். இறை குடும்பம் சிதறுண்டு வழிமாறிச் செல்லும் நிலையைக் கண்டார். மக்களின் விசுவாசம் ஆட்டம் காணும் நிலையை உணர்ந்தார். சிதறுண்ட மக்களை ஒன்றிணைக்கவும், விசுவாசத்தில் உறுதிப்படுத்தவும், இவ்வுலக நிலையாமையை உணர்த்தி, நிலையான விண்ணரசின் விதைகளை விதைத்து இன, மத, நில, மொழி கடந்து படைப்பனைத்தையும் இறை குடும்பமாக இணைக்க வேண்டிய அவசர தேவையை இனம் கண்டார். இறைதந்தையின் கனவாகிய "நாம் ஒன்றாயிருப்பதுபோல் எல்லோரும் ஒன்றாயிருப்பார்களாக" (யோவான் 17:11) என்ற மறைபொருளான திட்டத்தை நனவாக்க 1820ம் ஆண்டு போர்டோவின் திருக்குடும்ப சபையை நிறுவினார், திரித்துவத்தினதும், நசரேத்தில் வாழ்ந்த திருக்குடும்பத்தினதும், முதல் திருஅவையாக மலர்ந்த ஆதிக்கிறிஸ்தவ சமூகத்தினதும் ஒருமைப்பாட்டை, ஐக்கியத்தை தம் வாழ்வாக்கி, கால ஓட்டத்தின் தேவைகளுக்கேற்ப பணியாற்ற வேண்டும் என்ற தொலை நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட நம் நிறுவனம், தனது நீடிய பயணத்திலே 200 ஆண்டுகளின் மைல் கல்லை எட்டியுள்ளது.

காலத்தின் தேவைகளைக் கருத்திற் கொண்டு பல கிளைகளாகப் பணியாற்றிய எம் சபையின் அங்கத்தவர்களாகிய நாம், இன்று ஐந்து அழைத்தல்களாக அப்போஸ் தோலிக்க, தியானயோக, திருடசார்பற்ற, குருக்கள், பொது நிலையினரை உள்ளடக்கி ஒரே குடும்பமாக இறையரசின் பணிகளை குடும்பங்களிலும், சமுதாயத்திலும், திருஅவையிலும் முன்னெடுத்து வருகின்றோம்.

குறைகள் - நிறைகள், வெற்றிகள் - தோல்விகள், புகழ்ச்சிகள் - இகழ்ச்சிகள், சவால்கள் மத்தியில் "படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள்" (மாற்கு 16:15) என்ற இறைவாக்கிற்கேற்ப உலகின் பல பாகங்களிலும் மறைத்தூதுவர்களாக, ஏழைப் பயணிகளாக "இறைவன் மாத்திரமே, அவருக்கே மகிமை" என்ற மன உறுதியுடன் இன்று வரை பணியாற்றி வருகின்றோம்.

200 ஆண்டுகளாக பயணிக்கும் நம் பாதையின் தடங்களை நினைவுகூரும் முகமாக, மூன்று வருடங்களை ஆயத்தக் காலங்களாக்கினோம். 2017ம் ஆண்டை இறைவன் எம்மீது பொழிந்த அபரிதமான ஆசீர்வாதங்களுக்காகவும், நன்மைத்தனங்களுக்காகவும் நன்றி கூறும் ஆண்டாகவும், 2018ம் ஆண்டை "இறைவன் மாத்திரமே, அவருக்கே மகிமை" என்ற எம் ஆன்மீகத்தைப் புதுப்பிக்கும் ஆண்டாகவும், அதனைப் பல்வேறு நிலையிலுள்ளவர்களோடு சிறப்பான நமது பிரசன்னம் இல்லாத தளங்களைச் சந்தித்துப் ஆன்மீகப் புதுப்பித்தலைப் பெற ஊக்குவித்தோம். 2019ம் ஆண்டிலே எம் வரலாற்றையும், அனுபவங்களையும் வார்த்தைகளால் எடுத்தியம்பவும், அவற்றை எழுத்துருவில் வடித்து விசுவாசத்தை உறுதிப்படுத்தவும் அழைக்கப்படுவதுடன், தூய யாக்கோபு கூறுகின்ற "நம்பிக்கை செயல் வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாகும்" (2:17) என்ற இறைவாக்கிற்கொப்ப வெளிப்படுத்தும் வார்த்தைகளுக்கும், அறிக்கையிடும் விசுவாசத்திற்கும் பதிலிறுக்கும் முகமாக, அடிமட்டம் வரை இறங்கிப் பணிகளைத் தொடரவும் அழைக்கப்படுகின்றோம்.

2020ம் ஆண்டை யூபிலியின் நன்றியின் ஆண்டாக நினைவுகூர இருக்கின்றோம். 1820 ஆண்டு திரித்துவ திருநாளன்று ஆரம்பிக்கப்பட்ட எம் சபை 2020ம் ஆண்டு திரித்துவ இறைவனின் திருநாளன்றே 200 ஆண்டுகளின் நிறைவை அடைகின்றது. இத்தருணத்தில், நமது ஸ்தாகருக்கும், சபை ஆரம்பத்திற்கும் திரித்துவத்திற்கும் என்ன தொடர்பு என ஒரு கணம் சிந்திப்பது நல்லது. எமது ஸ்தாபகர் திரித்துவ இறைவனின் மறைபொருளை ஆழமாகச் சிந்தித்து அவர்களின் தெய்வீகத்தை மண்ணகத்தில் வாழவும், வாழ வழிகாட்டவும் விரும்பினார். இவரின் வாழ்வின் முக்கிய நிகழ்வுகளும், இலட்சியக் கனவுகளும் திரித்துவ திருநாளிலேயே நிறைவேறுகின்றன. குறிப்பாக அவரின் குருப்பட்டம் திரித்துவத் திருநாளுக்கு முதல் நாளும், முதல் திருப்பலி திரித்துவத் திருநாளன்றும், திருக்குடும்ப சபையின் முதல் குழு ஆரம்பிக்கப்பட்டதும், முதற்குழு அங்கத்தவர்கள் மூவராக தெரியப்பட்டதும், முதற்குழுவின் அங்கத்தவர்கள் மூவரில் ஒருவரான தனது சகோதரிக்கு திரினிற்றி என்று பெயரிட்டதும் அவருக்குத் திரித்து வத்தின் மட்டில் இருக்கும் அன்பை, பற்றுறுதியை அவர்களோடு கொண்டுள்ள இறை உறவை ஆழமாக வெளிப்படுத்துகின்றன.

வாழ்வின் ஊற்றாக விளங்கும் திரித்துவ இறைவனின் ஊற்றிலிருந்தே அனைத்தும் வழிந்தோட வேண்டும் என்ற ஆன்மீக தாகத்தோடு பயணித்த எம் ஸ்தாபகரின் வழ்யில் நாமும் பயணிப்போம். சிறப்பாக தற்போதைய எமது தாய்நாட்டின் நிச்சயமற்ற தன்மைகள், உலகின் எட்டுத் திசையிலும் இடம் பெறும் வன்முறைகள், அன்புக்கும், நீதிக்கும், ஒற்றுமைக்கும் முரணான சூழமைவுகள் மத்தியில் விசுவாசத்தை இழக்காது, உறுதியோடு பயணிக்க எம்மை முற்றுமுழுதும் கையளிக்க வேண்டிய அவசர தேவைகள், புதிய சவால்களாக உருவெடுத்துள்ளன.

எனவே, காலத்தின் தேவைக்கேற்ப பணியாற்ற உருவாக்கப்பட்ட எமது நிறுவனத்தின் இலட்சிய எதிர்நோக்கை சிரம் மேற்கொண்டு "முன்னேறிச் செல்லுங்கள், உங்களைத்தடை செய்வது எதுவுமில்லை" என்ற எம் ஸ்தாபகரின் உற்சாகமூட்டும் வார்த்தைகளை மனக்கண் முன்கொண்டு ஆன்மீக வாஞ்சையுடனும், வீரத்துவத்துடனும் பயணிக்கின்றோம். (தொடரும்....)

# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை

## பின்னணி, தோற்றம், வளர்ச்சி

அருட்பணி S.V.B. மங்களராஜா

(சென்ற இதழ் தொடர்ச்சி...)

**ஆயர் செமேரியாவின் (கல்வி சம்பந்தமான) அருட்பணி மடல்**

**பெண் கல்வி**

20. மேற்குறிப்பிட்ட விடயங்கள் (ஆண் பிள்ளைகளின் கல்வி) பற்றிய திட்டங் களையும், முன்னேற்ற நடவடிக்கைகள் பற்றியும் குறிப்பிட்ட நாம் முக்கியத்துவத்தில் சற்றும் குறைவுபடாத இன்னுமொரு விடயம் பற்றியும் அதாவது பெண்பிள்ளைகளது கல்வி பற்றிக்குறிப்பிடாதிருக்க முடியாது.

21. அன்புள்ள சகோதரரே இது பற்றி விளக்கமளிக்க அவகாசம் கிடைத்ததையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். சமுதாயத்தில் பெண்களுடைய முக்கியமான கடமைகள் பற்றியும், நீங்கள் வாழ்ந்து பணியாற்றும் சமுதாயத்தில் உளச் சீர்கேடுகள், சமுதாயத்தில் அவர்களது வகிபாகமும், கடமைகளும் முறையாக வரையறுக்கப்பட்டு ஒழுங்கான பயிற்சி வழங்கப்படாமையின் விளைவுகளேயாகும். நாம் மேலெழுந்த வாரியாகச் சிந்திப்பதிலும் பார்க்க ஒரு சமுதாயத்தில் குடும்பத்தில் ஒரு பெண்-ஒரு மகளாக, சகோதரியாக, மனைவியாக அல்லது ஒரு தாயாக வழங்கக்கூடிய பங்களிப்பி ல் மிகவும் காத்திரமானதாகும். சுதேசப் பெண்கள் தத்தமது நிலைகளுக்கேற்ப தமது கடமைகளை நிறைவேற்றப் பயிற்றுவிக்கப்படுவார்களாயின் அவர்களது முன்னுதாரணம் முழுக் கத்தோலிக்க சமுதாயத்திற்கும் ஒரு புதிய வாழ்வையளிக்கும் சக்தியாகவிருக்கும் என்பதில் எனக்கு எதுவித ஐயமுமில்லை.

22. பெண் துறவிகளின் தேவையும் எதிர் பார்க்கப்படுவதோடுல் அவர்களது வருகையும் வேறு சில தேவைகளும் நிறைவு செய்யப்படவேண்டுமென்ற அழுத்தங்களுக்கு நான் உள்ளானபோதும் தற்போதைக்கு அவற்றைச் சற்றுத்தள்ளி வைக்க வேண்டியுள்ளது. அவற்றைச் சுட்டிக்காட்ட முயல்வது ரணங்களைக் கிளறிவிடுவது போலிருக்கும். இவைவேறு சில சமூகங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் போது அவ்வளவு மோசமாக இல்லாவிட்டாலும் இங்குள்ள கத்தோலிக்க சமூகத்திற்கு அவப்பெயரை உண்டுபண்ணுமளவிற்குக் காத்திரமானவையாக உள்ளன இவற்றின் மோசமான கவலைக்குரிய நிலைமையை உங்கள் மனக்கண்முன் வைக்க விரும்புகிறேன். இவற்றின் தீமைகளை விலாவாரியாக விளக்கவேண்டியதில்லையென்றாலும் இச்சமூகத்தில் இவற்றின் வெளிப்படையான பிரசன்னம் தெளிவாயுள்ளது. அதுதான் தூய்மையான எடுத்துக்காட்டான வாழ்க்கை வாழும் பெண்களது பிரசன்னம் உங்களுடைய வீடுகளில், உங்களுடைய சமூக வாழ்வில், உங்கள் மத்தியில் உள்ள தாய்மாரில், உங்கள் மத்தியில் உள்ள மனைவிமாரில் போதுமானதாக இல்லை என்பதாகும். அது மட்டுமல்ல இறைவன் மீது கொண்ட அன்பினால் இறையேசுக்கிறீஸ்துவால் தேர்ந்தெடுக்கப்பட்டு உலக ஆசையையும், உடல் இச்சைகளையும் மிதித்துத்தள்ளி தூய வாழ்வுக்குத் தம்மை அர்ப்பணித்து வாழமுன்வந்தவர்களும் இன்னும் முன்னேற நிறைய இடமுண்டு.

மற்றெல்லா நாடுகளைப்போல தமது கற்பைக் கறைபடாது காக்கக்கூடியவர்கள் இங்கும் இருப்பார்கள் என்றே நான் எண்ணுகிறேன். இவர்கள் திருவெளிப்பாட்டு நூலில் உள்ளபடி (திரு.வெ.14:4) கறைபடியாக் கற்புள்ளவர்களாக ஆட்டுக்குட்டியை பின்தொடர்கின்றவர்கள்.


மேற்குறிப்பிட்ட எதிர்நோக்குகள் எவ்வளவு இருந்தாலும் பெண்களின் நற்பண்புகளில் கணிசமான வளர்ச்சி ஏற்பட்டேயாகவேண்டும். பெண்களின் பங்களிப்பின்றி இவ்வளர்ச்சி எவ்வாறு ஏற்படமுடியும்? ஒவ்வொரு நாட்டிலும், பல்வேறு காலநிலைகள், பல்வேறு தனித்துவ அடையாளங்கள் கொண்டவர்களாக இறைவனை மட்டுமே எண்ணுகின்றவர்களாக புனித வாழ்க்கை வாழ்ந்து, உடலிலும், மனதிலும் தூயவர்களாக அவர்கள் இளையோரின் ஆசிரியர்களாக அல்லது நோயாளரைப் பராமரிக்கின்றவர்களாக அல்லது ஏழைகளுக்கு வாழ்வாதாரமளிக்கின்றவர்களாக, இக் கண்ணீர்க்கணவாயில் வாழ்ந்து இங்குள்ளவர்களது கண்ணீரை துடைப்பவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஏற்கெனவே பல்வேறு இந்திய மறைத்தளங்களில் பல்வேறு துறவற சபைகளைச்சேர்ந்த பெண் துறவிகளைக் கொண்ட அமைப்புக்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. எனது இந்த (யாழ்) திருத்தூது மாவட்டத்திலும் இதுபோன்றவர்களுடைய பணி விரைவில் கிடைக்க வேண்டுமென்பது எனது விருப்பம். இவர்களுள் முதற்குழுவினர் வெகுவிரைவில் இலங்கையில் காலடியெடுத்து வைப்பார்கள் என்றும் நல்ல காலம் ஏற்படும் என்றும் நம்புகிறேன்.

இந்தப் பெண்துறவிகளுடைய வருகையை எதிர்பார்த்து அவர்களுக்கென ஒரு மடம் கட்டுவதற்காகக் கணிசமான தொகைப் பணத்திற்கு ஒரு பெரிய காணித்துண்டை பாங்கியுள்ளேன். அருட்சகோதரிகளுடைய வதிவிட வளாகம் வகுப்பறைகள், மாணவிகள் தங்கியிருக்கும் விடுதி வளாகங்கள், மற்றும் அலுவலகங்கள் போன்றவையெல்லாம் அமைக்க இன்னும் பெருந்தொகைப்பணம் தேவைப்படும் என்பது தெரிந்த விடயமே.

(தொடரும்..)

# காவலன் கலசம்



# விம்பம்

சிறுகதை

M.C. கனிலா

"அம்மம்மா, இங்க பாருங்களேன். இந்தப் படத்தை நான் தான் கீறினான். "என் பேத்தி தனது புதிய படைப்பைக் காண்பிக்க என்னிடம் ஓடி வருகிறாள். இந்த உலகிற்கு வந்து ஆறு வருடங்களேயான அவளுக்கு என் மீது அவ்வளவு பிரியம். அவளது ஆக்கங்களைக் கண்டு நான் மெய் சிலிர்த்துப் போவதும் சில சமயங்களில் அவளுக்காக அவ்வாறு பாவனை செய்வதும் எனக்கு வழக்கமாகி விட்டது. ஆனாலும் இந்தத் தடைவை அப்படி என்ன அதிசயத்தைக் கொண்டு வந்துள்ளாள். என்பதைக் காண ஆவலுடன் இருந்தேன். ஆம்அதிசயம்தான்அவள்வரைந்திருப்பது. ஒரு காலைக்காட்சி, நான் இந்த அறுபது வருடங்களில் கண்டிராத ஓர் அற்புதமான காலைக்காட்சி, அவள் உண்மையாகவே கண்டு இரசித்த காலைக்காட்சி. நீண்டதொரு வீதி, அங்கு காலைப்பொழுதில் அலைமோதும்மக்கள்கூட்டம், தன் தந்தையுடன் பள்ளிக்கு வந்திருக்கும் ஒரு சிறுமி (அது அவள் தான் என்பதை என்னால் உணர முடிந்தது) இவற்றைத் தனக்கே உரித்தான மழலைப் பாணியில் அழகாக வரைந்திருந்தாள். சூரியன் இல்லை, பறவைகள் இல்லை. ஆனாலும் அது ஒரு காலைக்காட்சி இரு மலைச்சிகரங்களுக்கு மத்தியில்ஒரு சூரியன் அதன் அருகில் சில பறவைகள். கீழே ஒரு வயலுக்கு மத்தியில் சில வீடுகள் என்றவாறு அமையும் வழமையான காலைக்காட்சியிலிருந்து எனது பேர்த்தியின் ஓவியம் வேறுபட்டிருந்தது எனக்கு மகிழ்ச்சியளித்தது. அவள் உண்மையாக, தனது மனதில் தோன்றிய எண்ணங்களையல்லவா வெளிப்படுத்தி இருக்கிறாள்.

"என்ர பிள்ளையெண்டா அம்மாவ, அந்த மாதிரி வடிவாக் கீறியிருக்கிறாள் அம்மாக்குக் காட்டுங்கோ தன் தாயிடம் தான் வரைந்த ஓவியத்தைக் காட்ட ஆவலுடன் சென்றாள்.

"எல்லாம் நல்லாத்தான் இருக்கு ஆனால்சூரியன் இல்லாததுதான்ஒருகுறை நாளைக்கு ரீச்சருக்குக் குடுக்க சூரியன் போட்டு புதுசா ஒரு படம் கீறுங்கோ" - இது என் மகளின் கருத்து குழந்தைகளை தாம் விரும்பியவாறு வரையக்கூட ஏன் அனுமதிப்பதில்லை. எனக்குக்கோபம்கோபமாக வந்தது. இருபது வருடங்களுக்கு மேலாக என் பராமரிப்பில் இருந்த என் மகளைக் கூட சுதந்திரமாக, தனித்துவமாக சிந்திக்க வைக்க முடியாத ஒரு தாயாக என் தோல்வியை உணர்ந்தேன். ஆனாலும் என் பேத்தியை விட்டுவிடப்போவதில்லை என உறுதியான முடிவுடன் இருந்தேன்.

"அவள் எல்லாம் நல்லாத்தான் செய்திருக்கிறாள். இதையே காட்டட்டும்."

எவ்வாறோ என் முடிவே இறுதியில் வென்றது. அடுத்த நாள் பாடசாலைக்கு என் பேத்தி அந்த ஓவியத்தைத் தான் கொண்டு சென்றாள். பரீட்சைக்குத் தோற்றிய மாணவன் போல இந்த ஓவியம் பெறப்போகும் மதிப்பெண்களுக்காகப் பதற்றத்துடன் காத்திருந்தேன். இதைக் கவனித்த என்மகள் "இதுக்குத் தான் சொன்னான் புதுசாக் கீறினா நல்லம் எண்டு. பேச்சு விழுந்து. அழுதோண்டு வந்தாளென்டா நீங்களே சமாளியுங்கோ என்று பொரிந்தாள் ஏற்கனவே வாடிப்போயிருந்த எனக்கு இது இன்னும்வலியைத்தருவதாகஅமைந்தது. பாடசாலை முடியும் நேரம் நெருங்குகையில் என்னால் ஓர் இடத்தில் இருக்கக் கூட முடியவில்லை. அங்குமிங்கும் நடக்க ஆரம்பித்து விட்டேன். நான் எதிர்பார்த்துக் காத்திருந்த அந்தக்கணம் வந்தது.

"அம்மம்மா" எனக் கூவிக்கொண்டு வீட்டினுள் நுழைந்தாள். அவளது புன்னகைத்த முகம், விபரீதமாக எதுவும் நடக்கவில்லை. என்பதை உறுதியாக புலப்படுத்தியது "ஸ்கூல்ல என்ன நடந்தது? நான் யதார்த்தமாகக் கேட்டேன். அவள் தன் கரிய கண்களை அகல விரித்து கதை-கதையாகக் கூறத்தொடங்கினாள். அந்த அழகை இரசிக்க என் இரு கண்களும் கூடப் போதாது. இதற்கிடையில் அவள் அந்த ஓவியத்தின் கதையையும் கூறத்தொடங்கினாள்.

"நான் ரீச்சரிட்ட படத்தைக் காட்டினான் ரீச்சர் நல்ல வடிவா இருக்கு எண்டு சொல்லி எல்லாரையம் எனக்குக் கைதட்ட சொன்னவா." இது போதாதா எனக்கு? என் பேர்த்தியின் சுயமான சிந்தனைக்கு, சுயமான ஆக்கத்திற்குக் கிடைத்த முதல் பரிசு. ஆனால் தனது கதையைத் தொடர்ந்தாள் என் பேர்த்தி "எனக்குப் பக்கத்திலிருக்கும் ரமணன் மலைகளுக்கிடையில் சூரியன் உதிக்கிற மாதிரி ஒரு படம் கீறியிருந்தான். அதுக்கு ரீச்சர் நீங்க மலையை எங்க கண்டனீங்க? எண்டு கேட்டு புதுசா ஒரு படம் கீறிட்டு வரச் சொன்னவ."

யார் இந்தப் புதிய ஆசிரியை? ஒரு குழந்தையின்சுயசிந்தனையைவரவேற்றதோடு மட்டும் நின்றுவிடாமல், ஏனைய குழந்தைகளையும் அவ்வாறுசெய்யஊக்குவிக்கிறாளே உங்கட ரீச்சரிட பெயர் என்ன, என்னுள் பொங்கிவந்த ஆர்வத்தை அடக்க முடியாது கேட்டேன். அவாட பெயர் மாலா ரீச்சர் அவசர அவசரமாய் கூறிவிட்டு தன் அன்னையிடம் சென்றாள். அன்று முதல் இந்த 'மாலா ரீச்சரை' எனக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது. சில சமயங்களில் வீடு முழுக்க ஒரே மாலா ரீச்சர் புராணம் ஒலிக்கக்கேட்டிருக்கின்றேன். இந்தக்குழந்தையின்மனதைஅவளதுசெயல்கள்எவ்வளவு அழகாகக் கவர்ந்திழுத்து விட்டன. நான் ஆசிரியராக இருந்த பொழுது குழந்தைகள் எவ்வாறு உருவாக்கப்பட வேண்டும் என்று எண்ணியிருந்தனோ அதே விதமாக என் பேத்தியை இந்த ஆசிரியை செதுக்கிக்கொண்டிருப்பதாக உணர்ந்தேன்.

என் பேர்த்தி சில சமங்களில் தவறு செய்து மாட்டிக்கொள்ளும் போது அல்லது வீட்டுவேலைகளை செய்யாமல் போகும் போது. இந்த ஆசிரியர் கொடுக்கும் தண்டனைகள் பற்றியும் அறிந்து கொண்டென். அவை எந்த விதத்திலும் குழந்தைகளைக் காயப்படுத்துவனவாக இல்லை. என் பேத்தி தான் செய்தது தவறு என்பதை உணர்ந்து கொண்டாள். இவ்வாறு நாளுக்கு நாள் நான் 'மாலா ரீச்சர்' மீது வைத்திருந்த மதிப்பு அதிகரித்து வந்தது. ஒரு முறையாவது அவரைக் கண்டு நீண்டநேரம் உரையாட வேண்டும் என்று விரும்பினேன். அதற்கான காலமும் வந்தது. பள்ளித் தவணைப் பரீட்சைகள் நிறைவுக்கு வந்தன. பள்ளி விடுமுறைக்கு முதல் நாள் பிள்ளைகளின் பெற்றோர் அல்லது பாதுகாவலரை பிள்ளையின் வகுப்பாசிரியர் சந்தித்துப் பேசுவது வழமை. அதற்கான அழைப்பு என் பேர்த்தியின் மூலம் வீட்டிற்கு வந்து சேர்ந்தது. நான் கடவுளை வேண்டியது போலவே என் மகள் மற்றும் மருமகனுக்கு அந்த நாள் தவிர்க்க முடியாத வேலைகளால் நிரம்பியிருந்தது. என் மகளின் வாயிலிருந்து வெளிவரப்போகும் அந்த வார்த்தைகளை எதிர்நோக்கி என் காதுகள் காத்துக்கிடந்தன. நான் நினைத்தது போலவே அவள் என்னிடம் வந்து கூறினாள் "நான் நாளைக்கு வெளியில் போகணும் அவருக்கு முக்கியமான வேலை இருக்கு நீங்க ஒருக்கா பிள்ளையோட போங்களேன்". உள்ளம் குதூகலித்தது ஆனாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல்எனக்கே உரியதனிப்பாணியில் சற்றுச் சலிப்புடன் "சரி போறன் என்ர பேத்திக்கு நான் போகாமல் வேறு யார் போறது". என்று கூறிக்கொண்டு எனது அறைக்குள் சென்றேன். என்னால் புன்னகைப்பதைத் தவிர வேறு ஒன்றும் செய்யமுடியவில்லை.

அடுத்த நாள் காலை என் பேத்தியுடன் புறப்பட்டு அவளது பாடசாலைக்குள் சென்றேன். என்னைப் போலவே சிந்திக்கும் அந்த ஆசிரியரைக் காணும் ஆவல் என் இதயம்முழுவதையும்நிரப்பிக்கொண்டது. நான் எனது பேத்தியின் வகுப்பினுள் நுழைகையில் ஓர் இளம் ஆசிரியை மெல்லிய புன்னகையுடன் என்னை நோக்கி எழுந்து வந்தாள். அவள் என் அருகில் வந்ததும் என் பேத்தி ஆரவாரம் செய்து அவள் தான் தன் விருப்பத்திற்குரிய மாலா ரீச்சர் என்பதை அறிவித்தாள். நான் எனது காலை வணக்கங்களைத் தெரிவித்தேன். அவளும் பதிலுக்கு "குட்மோனிங் மிஸ்" எனக் கூறினாள். நான் சற்று அதிர்ந்து போய் விட்டேன். நான் ஓய்வு பெற்ற ஆசிரியர் என்பது இவளுக்கு எப்படித் தெரிந்தது? "என்னைத் தெரியேலயா மிஸ்" அவள் புன்னகையுடன் தொடர்ந்தாள். "நான் உங்களிடத்தில் தான் படிச்சனான். என்ர பெயர் மாலா திருநெல்வேலி மகா வித்தியாலயத்தில் நீங்கள் இருக்கேக்க..." பாடசாலையில் படிச்சனான்.

"ஆ, அப்படியே" பழைய ஞாபகங்கள் சிறிதளவு என்னுள் எட்டிப்பார்த்தன. "அந்த மாலாவே இது." என்னால் சந்தோஷத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இன்று ஆசிரியராக நான் பெறும் மாபெரும் வெற்றி இது. ஒரு ஆசிரியரின் வெற்றி அவர் கற்பித்த மாணவர்களின் மதிப்பெண்களில் மட்டுமே தங்கியுள்ளது. என்பது இங்கு பலரின் கருத்து. ஆனால் அவரின் பணி அதற்கும் அப்பால் செல்ல வேண்டியது. அவரின் உண்மையான வெற்றி சமூகத்தில் ஒரு நற்பிரஜையை நிலைநாட்டுவதே. நான் என்னை உருக்கிக் கற்பித்த தன் மொத்தப் பலனை இன்று இவள் மூலம் காண்கிறேன். நான் உருவாக்கிய இந்த ஆசிரியை என் மறுபிறப்பாக எனது விம்பமாக என் கண்களில் துளிர்கிறாள்.

## மனிதம் வாழுகின்றதா...

அது நல்லூர் ஆலயப் பின்பக்கச் சந்தி கோவில் வீதியும் பருத்தித்துறை வீதியும் சந்திக்கும் முக்கிய இடம். வழமை போன்று அன்றும் நான் காலையில் வேலைக்கு புறப்படுகின்றேன். நல்லூர் சந்தியை எட்டும் பொழுது "டாமால்" என்ற ஒரு சத்தத்துடன் மோட்டார் சைக்கிள் ஒன்று என்னை மோதுகின்றது. நான் பயத்தில் கண்களை மூடுகின்றேன். சைக்கிள் பகுதிகள் சில துண்டு துண்டாகப் பறக்கின்றன.. கண்களை நான் விழித்துப் பார்க்கின்றேன். எனது பிளசர் சைக்கிளுடன் நான் கீழே விழுந்து கிடக்கின்றேன். என்னைச் சுற்றி ஒரு கூட்டம். சிலர் சேர்ந்து என்னையும் சைக்கிளையும் கரைக்கு அப்புறப்படுத்தித் தூக்கிச் செல்கின்றனர். மோட்டார் சைக்கிளுடன்மோதியதுஅப்போதுதான் என் நினைவுக்கு வருகிறது. என்னை தூக்கி நிறுத்தி கையிலுள்ள நோவுக்கு சிலர் ஒத்தணம் கொடுக்கின்றார்கள் உரஞ்சி விடுகின்றார்கள். வீட்டுக்கு அறிவிக்க வேண்டுமா? என வேறு சிலர் கேட்கின்றார்கள். எனது சைக்கிளில் சிறிது கீறல் காயமும் காலில் நோவும் மட்டுமே ஏற்பட்டது. இவர்களின் அன்புத் தொல்லையில் எனது நோவுகள் குறைகின்றன. எனக்கு முதலுதவி வழங்கிய அத்தனை உத்தமர்களும் எனக்கு முன் பின்தெரியாதவர்கள். என்னால்வேலைக்குச் செல்ல முடியுமா? என கேட்டு எனது பையையும் அதில் ஏற்றி வைத்து மீளவும் என்னை வேலைத்தலத்திற்கு அனுப்பிவைக்கின்றார்கள். இவ்வளவுக்கும் எனது சைக்கிளுக்கு எந்த வித சேதமும் ஏற்படவில்லை. என்னை இடித்து விழுத்திய சைக்கிள் உரிமையாளர் என்னிடம் தெரியாமல் நடந்து விட்டதென மன்னிப்புக் கோருகின்றார். அவருடைய சைக்கிளுக்குத்தான் சிறிது சேதம் எனக்கோ ஆச்சரியம் கடவுள் வடிவில்வந்தஇந்தஉத்தமர்கள்யாரோ?

– அன்ரன் ஞானம்

## கருணைக்கொலைக்கு எதிராக அவுஸ்ரேலியா ஆயர்கள்

யூன் 19, முதல் அவுஸ்ரேலியாவின் விக்டோரியா மாநிலத்தில், மருத்துவப் பணியாளர்களின் உதவியுடன் கருணைக்கொலை அனுமதிக்கப்படுவதற்கு மாநில அரசு வெளியிட்டுள்ள அறிக்கைக்குதங்கள்எதிர்ப்பைவெளியிட்டுள்ளனர், அப்பகுதி கத்தோலிக்க ஆயர்கள். இம்மாதம் 19ம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் இந்த சட்ட அனுமதி குறித்து தங்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ள ஆயர்கள், தீராத நோயால் அவதிப்படுவோரும், வேதனையை தாங்க முடியாமல் துடிப்போரும் தங்கள் விருப்பத்தை வெளியிட்டு, கருணைக் கொலைக்கு தங்களை உட்படுத்த அனுமதிக்கும் இந்த சட்டம், தூக்கியெறியும் கலாசாரத்தின் ஒரு பகுதியாகவுள்ளதுஎனகுறைகூறியுள்ளனர்.

வாழ்வின் இறுதிக்காலம் வரை ஒவ்வொருவரும் அன்புடன் நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ள ஆயர்கள், நோயாளிகள் மீது கொண்டுள்ள கருணை காரணமாகவே இக்கொலைகள் அனுமதிக்கப்படுகின்றன என்ற கூற்று ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது என தெரிவித்துள்ளனர்.

கருணைக் கொலைகளை நியாயப்படுத்தும் இந்த நவீன காலத்திலும், கத்தோலிக்க மருத்துவமனைகளும், நல உதவி மையங்களும், தங்கள் கொள்கைகளில் மனவுறுதியுடன் செயற்படுவதாக தெரிவித்துள்ள விக்டோரியா மாநில ஆயர்கள், மனச்சான்றுடன்செயற்படவேண்டிய நேரமிது எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

மனிதர்களின் உயிர்களை பறிப்பது, இறக்கும் தறுவாயில் இருப்போருக்கு அன்பு காட்ட தவறுவது, நல ஆதரவு நிதியுதவிகளைக் குறைப்பது, தற்கொலைகளை ஊக்குவிப்பது, தீவிர நோய்களின் போது மரணம் ஒன்றே தீர்வு என எண்ணி செயற்படுவது போன்ற கருத்துக்களை, தங்கள் அறிக்கையில், வன்மையாகக் கண்டனம் செய்துள்ளனர், அவுஸ்ரேலியாவின் விக்டோரியா மாநில ஆயர்கள்.

# புலம்பெயர்ந்தோருடன் இணைந்து, நற்செய்தியின் வழியில், கிறிஸ்தவ சமுதாயத்தை கட்டியெழுப்புவோம் - திருத்தந்தை

யூன் 20, கிறிஸ்துவின் தூய்மை மிகு உடலும், இரத்தமும் திருவிழா வத்திக்கானில் சிறப்பிக்கப்பட்டதையொட்டி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் செய்தியை, 'ஆண்டவரின் உடல்' என்று பொருள்படும் Corpus Domini என்ற 'ஹாஷ் டாக்' குடன் வெளியிட்டார்.

"இயேசு நமக்காக, உடைக்கப்பட்ட அப்பமாக மாறினார். நாம் இனி நமக்காக வாழாமல், ஒருவர் ஒருவருக்காக வாழும் வண்ணம், நம்மையே பிறருக்கு வழங்கு மாறு அவர் கேட்கிறார்" என்ற சொற்கள், திருத்தந்தையின் செய்தியாக வெளியாயின.

அத்துடன், யூன் 20ம் திகதி, புலம் பெயர்ந்தோர் உலக நாள் கடைபிடிக்கப் பட்டதையொட்டி, 'புலம்பெயர்ந்தோருடன் இணைந்து' என்ற பொருள்படும் With Refugees என்ற 'ஹாஷ்டாக்'குடன், திருத் தந்தை, தன் 2வது செய்தியை வெளி யிட்டார்.

"புலம்பெயர்ந்தோருடன் இணைந்து, நற்செய்தியின் வழியில், இன்னும் கூடுத லாக ஆதரவு வழங்கும், இன்னும் கூடுத லாக உடன்பிறந்த உணர்வு கொண்ட, இன்னும் திறந்த மனம் கொண்ட கிறிஸ் தவ சமுதாயத்தைக் கட்டியெழுப்ப, இறை வனின் பராமரிப்பு நமக்கு வாய்ப்பளிக் கிறது" என்ற சொற்களை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டார்.



மேலும், யூன் 23, இத்தாலியிலும், உலகின் பல்வேறு தலத்திரு அவை-களிலும், கிறிஸ்துவின் தூய்மைமிகு உடலும், இரத்தமும் திருவிழா சிறப்பிக்கப் படும் வேளையில், உரோம் நகருக்கு அருகே உள்ள காசல் பெர்தோனே (Casal Bertone) பகுதியில் அமைந்துள்ள ஆறுதல் வழங்கும் அன்னை மரியா (SANTA MARIA CONSOLATRICE) கோவிலில், மாலை 6 மணிக்கு, திருத் தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருப்பலி நிகழ்த்துவார் என்றும், பின்னர், அப்பகுதி யின் பல்வேறு சாலைகள் வழியே நடை பெறும் திருநற்கருணைப் பவனியை முன்னின்று நடத்தி இறுதியில், "Roma 6" என்ற திடலில் நற்கருணை ஆசீர் வழங்குவார் என்றும் அறிவிக் கப்பட்டுள்ளது.

# நற்செய்தியை தன் வாழ்வுச் சட்டமாகக் கொண்ட துறவு சபை - திருத்தந்தை

உடன்பிறந்த உணர்வை ஒரு வருக்கொருவர் கொண்டிருந்து, அமை தியைப் பறைசாற்றுங்கள் என தன்னைச் சந்திக்க வந்திருந்த கொன்வெஞ் சுவல் பிரான்சிஸ்கன் துறவு சபையினரி டம் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அண்மையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தங்கள் புதிய உலகத்தலைவருடன் தன்னைச் சந்தித்த கொன்வெஞ்சுவல் பிரான்சிஸ்கன் துறவு சபையின் உலகப் பொது அவைப் பிரதிநிதிகளை யூன் 17 திருப்பீடத்தில் சந்தித்த திருத்தந்தை இவ் வாறு கூறினார்.

புதிய உலகத்தலைவர் அருட் பணி Carlos Trovarelli அவர்களுக்கு வாழ்த்துக்களை வெளியிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கடந்த கோடை காலத்தில் இச்சபையினர் கூட்டிய சிறப்புப் பொதுமன்றக் கூட்டத்தில், சபை விதி-முறை களைப் புதுப்பித்ததும், அதற்குத் திருப்பீடம் அங்கீகாரம் வழங்கியுள்ளதும் குறித்து தன் மகிழ்ச்சியை வெளியிட்டார்.

நற்செய்திக்கு செவிமடுப்பதிலிருந்து பிறந்ததாக தன்னை வெளிப்படுத்தி, நற் செய்தியையே தன் வாழ்வாகவும், வாழ் வுச் சட்டமாகவும் கொண்டிருக்கும் கொன்வெஞ்சுவல் பிரான்சிஸ்கன் துறவு சபை, இளந்துறவிகளுக்கு பயிற்சியளித் தல், கலாசாரங்களிடையே ஏற்பு டைமை, பகிர்தல், பொருளாதார வெளிப்படைத் தன்மை போன்றவை குறித்து அண்மை யில் விவாதித்து, மாற்றங்களைப் புகுத்தி யுள்ளதையும் தன் உரையில் சுட்டிக் காட்டினார் திருத்தந்தை.

உடன்பிறந்த உணர்வு என்பது நன்றியுணர்வுடன் வரவேற்கப்பட வேண் டும், இங்கு, எவரும் விலக்கி வைக்கப் படாமல் அனைவரும் ஏற்றுக்கொள்ளப்படு கிறார்கள், மற்றும், இங்கு இவ்வுணர்வு டன் இருப்பவர்கள், ஒன்றை பயன்படுத்தி தூக்கியெறிபவர்கள் அல்ல, மாறாக ஒரு-வரையொருவர் கட்டியெழுப்புபவர்கள் என்று கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அதிகாரத்திற்கான சோதனை மிகப் பெரியதாக இருக்கும் இவ்வுலகில், உங்க ளுடைய நோக்கமெல்லாம் பிறருக்குப் பணியாற்றுவதிலேயே இருக்கவேண்டும் என்ற விண்ணப்பத்தை முன்வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அவர் களும் பணிபெறுபவர்களாக இல்லாமல் இயேசுவைப்போல், பணியாளர்களாக செயற்படவேண்டும் என அசிசியின் புனித பிரான்சிஸ், தன் சபை அங்கத்தினர்களி டம் கூறியதை நினைவு கூர்ந்தார். அமைதியை எடுத்துரையுங்கள் என்ற விண்ணப்பத்தையும் முன்வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அமை திக்குரிய முன்நிபந்தனையாக ஒப்புரவு இருப்பதையும், மன்னிப்பும் இரக்கமும் இன்றி அமைதி பிறக்கமுடியாது என்பதை யும் சுட்டிக்காட்டினார். அமைதி என்பது, பிரச்சினைகள் ஏதுமற்ற ஒரு நிலை அல்ல, மாறாக, இறைவனின் இருப்பை எடுத்துக்காட்டுவதாக உள்ளது எனத் திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்தார்.

## அருட்சகோதரி மேரி சிசிலியா காலமானார்

செபமாலைத் தாசர் சபையைச் சேர்ந்த **அருட்சகோதரி மேரி சிசிலியா** அவர்கள் காலமானார். வசாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்சகோதரி மேரி சிசிலியாவின் நல்லடக்க ஆராத னைகள் 21.06.2019 மாலை 3.00 மணிக்கு அச்சுவேலி புனித செபமாலைத்தாசர் சபைக் கன்னியர் மடத்தில் நடைபெற்றன. அருட்சகோதரியின் ஆன்மா நித்தியத் தில் இளைப்பாற மன்றாடுவோமாக.

## புலம்பெயர்வு பிரச்சினையில் பாதிக்கப்படுவோர் சிறுவரே!

இவ்வுலகில் ஒவ்வொரு இரண்டு நொடிகளுக்கு ஒருவர், புலம் பெயர்ந்த நிலைக்கு உள்ளாகின்றனர் என்றும், இப்பிரச்சினையில் சிறாரே அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என்றும், புலம்பெயர்ந்தவர் உலக நாளையொட்டி வெளியான ஒரு புள்ளி விவரம் கூறுகிறது.

பிரிட்டன் மக்கள் தொகையைவிட அதிகமான மக்கள், அதாவது 7 கோடியே 8 இலட்சம் பேர், போர்கள் அல்லது அடக்கு முறைகளால் கட்டாயமாக, சொந்த இடங்களைவிட்டு வெளியேறி யுள்ளனர் என்றும், இவர்களில் ஏறத்தாழ 3 கோடியே 50 இலட்சம் பேர் சிறார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.


## 7ம் ஆண்டு நினைவு



அன்பான அம்மா
எம்மை விட்டு நீங்கள் சென்று
ஏழாண்டு ஓடி மறைந்தது
நிஜமென்று நம்பியது நிழலானது
நினைவுகள் மட்டுமே நிஜமானது
நிலைவாழ்வில் தேவன் பாதம்
நித்தியமாய் உம் அன்மா இளைப்பாற
நிதமும் நாம் இறைவனை
இறைஞ்சுகின்றோம்

திருமதி
**மேரிதிற்றா ஆசீர்வாதம்**
(ரஞ்சிதம்)

மண்ணகப் பிறப்பு 16.11.1935
விண்ணகப் பிறப்பு 24.06.2012

"என் ஓட்டத்தை முடித்து விட்டேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே"
(2தி.மொ 4:7-8)

மாரீசன்கூடல்
இளவாலை

AD 43

மறந்திடா நினைவினில் என்றும்
அன்புக்கணவர், பிள்ளைகள்
மற்றும் உறவுகள்


## பொறுமையும், கூடிய சக்தியும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)..

இந்நிகழ்வில் தலைமையுரையாற்றிய இயக்குனர் அருட்பணி. ச.இயூஜின் பிரான்சிஸ் அவர்கள் "சமாதானத்தையும் நல்லிணக் கத்தையும் முன்னெடுப்பதற்கு இளையோர் பங்களிப்பு முக்கிய மானது. அவர்கள் ஆற்றல் திறன்களை வளப்படுத்தி கிராமங்களில் மேற்கொள்ளும் சர்வமத ஒன்றிணைவு மூலம் இளைஞர்கள் முன்னெடுக்கும் ஒவ்வொரு செயல்களும் அவர்கள் சமாதானத் தூதுவர்களாக செயற்படுவதற்குத் தூண்டு கோலாக அமைகிறது. அதற்கான ஊக்கப்படுத்தல் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்" எனக் கூறினார்.

இந்நிகழ்வில் சிறப்புரையாற்றிய போசானா அவர்கள் "ஆயுதத்தால் சமாதானத்தின் அமைதியை ஏற்படுத்துவது சமாதா-னமாகாது. மக்கள் உறவைப் பலப்படுத்துவதில் ஒவ்வொருவரும் தன் வீட்டிலும், சூழலிலும், நாட்டிலும் சமாதானம் ஏற்பட வேண்டு மானால் எமது நாடு, எமது சமூகம், எமது குடும்பம் என்ற பற்றுறுதி கொள்ளும் போதுதான் சமாதானம் நிலைக்கும். இதற்கு எமது நாட்டின் சிறுவர்கள், இளையோர், முதியோர்கள் ஒன்றிணைந்து சமாதானத்தை வளர்க்க முன்வர வேண்டும்.

எமது நாட்டில் மட்டும் சமாதானத்துக்கான போர்கள் நடைபெறவில்லை. எல்லா நாடுகளிலும் நடைபெற்றே வருகிறது. சமாதானம் என்பது இலேசான காரியமில்லை. மிகுந்த பொறு மையும், கூடிய சக்தியும் இருக்க வேண்டும். சமாதானத்தை ஒருநொடிப்பொழுதில் அழிந்து விடலாம். அதனைக் கட்டியெழுப்பு வதென்பது மிகவும் கடினமானது. அதைக் கட்டியெழுப்புவது பல காலம் தேவைப்படும். அதைச் சலிக்காமல் முன்னெடுத்துச் செல்வதில் இளையோர் ஒன்றிணைந்து முன் நின்று உழைக்க வேண்டும். அதற்கான முயற்சிகளுக்கு என்றும் எமது பங்களிப்புகள் அனுசரணையாக இருக்கும். என்றார்.

## பண்டத்தரிப்பு மருத்துவமனை....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் மறைமாவட்ட ஆயர் தனது உரையில் மரியன்னையின் பக்தியை யும் இங்கு வரும் நோயாளிகள் மரி யன்னையின் பரிந்துரையால் நலன் பெ-றவும் இச்சிற்றாலயத்தைப் புனரமைப்புச் செய்ய நிதி வழங்கியவர்களையும் ஒத்து ழைப்பு நல்கியோரையும் வாழ்த்தி இறை ஆசியும் வழங்கினார்.

அனைத்து நிகழ்வுகளையும் மாதகல் பங்கு தந்தை R.H. சகாய நாயகம் அடிகளாரும் மூன்று ஆலயங் களின் அருட்பணிச் சபையினரும் இணைந்து செயற்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.


## எண்பதாம் அகவை நினைவு

தோற்றம் 27 . 06 . 1939



மறைவு 30 . 01 . 2019

திருமதி
**அன்ரனெற் றோஸ்மலர்**
வேதநாயகம் (மணி)

வாழ்ந்த மனிதர் மரணந்தன்னால் வீழ்ந்து
போவார் -இது விதியின் முடிவாம்
அகவை எண்பதில் பரமனடியில்
நித்தியமாய் இளைப்பாற- கண்கள்
பணிக்க வேண்டுகின்றோம் இறைவனையே

7,அச்சக வீதி,
யாழ்ப்பாணம்

AD 44

குடும்பத்தினர்



## இறைவா உமக்கு நன்றி

**இயேசுவே பாவி என் வேண்டுதலுக்கு இரக்கம் காட்டிய உமக்கு நன்றி கூறுகின்றேன்.**

22.09.2015 ஆண்டு விழுந்து முறிந்த என் கால் சத்திரசிகிச்சை செய்தும் குணமடையவில்லை 2017ம் ஆண்டு திரும்பவும் செயற்கை எலும்புகள் பொருத்தி சத்திரசிகிச்சை செய்யத் தீர்மானித்து விட்டார்கள். திரும்ப செய்ய நான் விரும்பவில்லை இறைவனிடம் இடைவிடாது அதிகாலையில் வேண்டி வந்தேன். எசேக். 37:1-14வரை அதன்பலனாக 29-05-2019 எக்ஸ்றேஎடுத்த போது தனது எலும்பு பொருத்தி விட்டது. இனிமேல் சத்திரசிகிச்சை தேவை இல்லை என்று திருச்சிலுவை வைத்தியசாலை டாக்டர் உறுதிப்படுத்தி விட்டார். எனது வேதனையை நீக்கிய இறைமகன் யேசுவிற்கு நன்றியும் சாட்சியமும் கூறுகின்றேன்.

*கோடான கோடி நன்றி ஆண்டவரே* திருமதி. யூலியானா பிறின்ஸ்
பாஷையூர்



## 49ம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்ணில் 06 . 10 . 1962



விண்ணில் 26 . 06 . 1970

AD 42

செல்வி
**மிரியம் சாமினி**

நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்
ஆண்டவரே!
முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக.
சமாதானத்தில் இளைப்பாறுவாராக. ஆமென்.

சுருவில்

குடும்பத்தினர்

# வெண்புரவி நகர் புனித அந்தோனியார் திருநாள்

வெண்புரவி நகர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா.09.06.2019 ஞாயிறு அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15.06.2019 சனி திருவிழாத் திருப்பலி, திருச்சூருபப் பவனியுடன் நிறைவுற்றது.

இவ்வருடம் எமது மறைமாவட்டம் பொதுநிலையினரின் தேவ அழைத்தல் ஆண்டாகக் கடைப்பிடிக்கப்பட்டிருந்ததனால் நாளாந்த வழிபாட்டு மையப்பொருள் இக்கருத்தை வெளிக்கொணர்வதாகவும், முதல் நாளில் மறைமாவட்டக் குருக்களைப் பற்றியும் ஏனைய நாட்களில் வெவ்வேறு துறவற சபையினர் (சல்வற்றோறியன், செபமாலைத்தாசர், கிளறிசியன், அமதிகள்) திருப்பலி ஒப்புக்கொடுத்து வழிபாடுகளை சிறப்பித்தனர். நாளாந்த மறையுரைகளை அருட்தந்தை அ.பி. செலஸ்ரீன், அமதி அடிகளாரும் இறுதிநாள் நற்கருணை வழிபாட்டினைக் குருமுதல்வர் அருட்திரு. ப. யோ. ஜெபரட்ணம் அடிகளாரும் திருநாள் வழிபாட்டினை கியூடெக் இயக்குனர் அருட்திரு ச. இயூஜின் அடிகளாரும் தலைமை தாங்கி நடத்தினர். இவ் ஆலயப் பெரு விழாக்கால எல்லா வழிபாட்டு ஒழுங்குகளையும் பங்குத்தந்தை அருட்பணி லொஷிங்டன் (அ.ம.தி) அடிகளார் திறம்பட ஒழுங்குசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### இந்தியப் பிரதமர் கொச்சிக்கடை

## புனித அந்தோனியார் ஆலயத்தில் பிரார்த்தனை



ஒரு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்த புதிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் எமது பேராயர் அதிவணக்கத்திற்குரிய மல்கம் கருதினால் ரஞ்சித் ஆண்டகையுடனும் எமது நாட்டின் பிரதமருடனும் இணைந்து உயிர்த்த ஞாயிறன்று நடைபெற்ற குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்ட கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம் சென்று இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி இலங்கை நாட்டின் அமைதிக்காகப் பிரார்த்தனை செய்தார்.

# கார்மேல் முன்பள்ளியில் சிறுவர் பூங்கா திறந்து வைப்பு



கார்மேல் முன்பள்ளியின் சிறுவர் பூங்கா முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் யாழ். மாநகர சபை உறுப்பினருமான சொலமன் சூ. சிறில் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. இப்பூங்கா கம்பரெலிய திட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவின் ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இவ் வைபவத்தில் கார்மேல் கன்னியர் மடத்தலைவி, புனித யோன் பொஸ்கோ வித்தியாலய அதிபர் முன்பள்ளி அதிபர், ஆசிரியர்கள், அருட்சகோதரிகள் மற்றும் முன்பள்ளி பெற்றோர் ஆசிரிய சங்க நிர்வாக உறுப்பினர்கள் யாவரும் கலந்து கொண்டனர்.



யாழ்.மரியாயின் சேனை - கிளிநொச்சி கியூரியாக் கூட்டம் ஆனி 8ம் திகதி சனிக் கிழமை இடம்பெற்றது. அருட்தந்தை அ.அமல்ராஜ் அடிகளார் ஆன்ம ஆலோசகராக செயல்பட்டு இக்கியூரியாவை வழி நடத்துகிறார். சேனையார் ஒவ்வொருவரும் தாராள குணத்துடன் சேவைக்குத் தங்களை அர்பணித்து பெறுமதியான ஊழியம் செய்வது இன்றியமையாதது என்று அறிவுரை கூறினார்.

# திருவிவிலிய மறைக்கோட்டப் பரீட்சைகள் – 2019

நாட்டின் அசாதாரண நிலை காரணமாகப் பிற்போடபபட்டிருந்த திருவிவிலிய மறைக் கோட்ட ரீதியிலான அறிவுப்போட்டியும் திருவிவிலியப் பேச்சுப்போட்டியும் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை 30.06.2019 அன்று நடைபெற உள்ளது. தூர இடங்களில் வசிக்கின்ற மாணவ மாணவிகளின் போக்குவரத்து வசதி கருதி பருத்தித்துறை, கிளிநொச்சி, ஆகிய மறைக் கோட்டங்களில் வெவ்வேறாக இரண்டு பரீட்சை நிலையங்களில் நடாத்தப்பட இருக்கின்றது. (தொடர்ச்சி 2ம் பக்கம்)

# அல்லைப்பிட்டியில் "குளுனி" (Cluny) அருட்சகோதரிகள்



யாழ். மறைமாவட்டத்தில் சர்வதேச பாடசாலை ஒன்றின் தேவை நீண்டகாலமாக இருந்து வந்த நிலையில் யாழ். ஆயரின் பெரும் முயற்சியில் அல்லைப்பிட்டியில் மொன்பேர்ட் சபை அருட்சகோதரர்களின் துணையுடன் பூர்வாங்கப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றமை நீங்கள் அறிந்தமையே.

இப்பாடசாலை ஆரம்பிக்கப்படும்போது கல்விப் போதனைப் பணியில் பணியாற்ற "குளுனி" சபை அருட்சகோதரிகளை ஆயர் அவர்கள் எமது மறைமாவட்டத்திற்கு அழைத்திருந்தார்.

இவ் அழைப்பையேற்று இச் சபையின் சகோதரிகள் அல்லைப்பிட்டிப் பங்கில் தங்கியிருந்து பணியை ஆரம்பிக்கத் தயாராகின்றனர்.

கடந்த வாரத்தில் ஆயர் அவர்கள் குருக்களுடன் இணைந்து அவர்களின் கன்னியர் மடத்தை ஆசீர்வதித்துத் திருப்பலி ஒப்புக்கொடுத்ததைப் படத்தில் காணலாம்.

இவ் அருட்சகோதரிகளின் கல்விப்பணி எம் மறை மாவட்டத்தில் சிறக்க பாதுகாவலன் நெஞ்சார வாழ்த்தி நிற்கின்றது.

# பிரியாவிடை சொல்வதற்கு வாழ்வு கற்றுத் தருகிறது

- திருத்தந்தை



நம் சகோதரருக்குப் பிரியாவிடை சொல்வது என்பது, அவர், கடவுளிடம் செல்வதற்கு அனுமதிப்பதாகும். அதாவது, அன்பினால் காயமடைந்த மிக அழகிய கைகளைக் கொண்டிருக்கும் ஆண்டவரின் கரங்களில் அர்ப்பணிப்பதாகும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மறையுரையாற்றினார்.

நீண்டகாலமாக நோயால் துன்புற்று இறைபதம் சேர்ந்த ஆர்ஜென்டினா நாட்டுத் திருப்பீடத்தூதர் பேராயர் லியோன் அவர்களின் அடக்கச்சடங்கு கூட்டுத்திருப்பலியை, ஜூன் 15, காலை 7.30 மணிக்கு, வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் தலைமையேற்று நிறைவேற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஒரு மேய்ப்பர், தனது மந்தையைவிட்டுச் செல்வதை மையப்படுத்தி மறையுரையாற்றினார்.

புனித பவுல் அவர்கள், எருசலேமுக்குச் செல்வதற்குமுன், மிலேத்துஸ் நகரில் கண்ணீரோடு நின்ற கிறிஸ்தவர்களிடம் பிரியாவிடை சொன்னது போன்று, மேய்ப்பர் தன் மக்களிடம், தனது சாட்சிய வாழ்வால் பிரியாவிடை சொல்கிறார் என்று கூறிய திருத்தந்தை, ஒரு மேய்ப்பர், இவ்வுலகைவிட்டுச் செல்கின்றவேளையில், தனது வாழ்வு, கடவுளுக்குப் பணிந்து நடக்கும் வாழ்வு என்பதை வெளிப்படுத்துகிறார் என்று கூறினார்.

இவ்வுலகைவிட்டுச் செல்வது என்பது, விடுபடுதலாகும் என்றும், இது, இவ்வுலகப் பொருள்களில், இவ்வுலகத்தன்மையில் பற்றறுத்து வாழ்வதற்குப் பழகியவர்களின் சான்றாகவும் உள்ளது என்றும் மறையுரையில் உரைத்த திருத்தந்தை, ஒரு மேய்ப்பர், பிரியாவிடை சொல்கின்றவேளை, தனது பணியை மற்றவர்களிடம் விட்டுச் செல்கிறார் என்று கூறினார்.

ஒரு மேய்ப்பர், வாழ்வுக்குப் பிரியாவிடை சொல்வது, இறைவாக்குப்பண்பையும் கொண்டது என்றுரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அது, தான் சென்றபின்னர், பேராசைபிடித்த குள்ளநரிகள் வருவார்கள், அவர்களிடமிருந்து எவ்வாறு காத்துக்கொள்வது என்பதற்கு வழியைக் காட்டுகிறது என்றும் தெரிவித்தார்.

பிரியாவிடை சொல்லும் மேய்ப்பர், இறுதியில், உங்களைக் கடவுளிடம் அர்ப்பணிக்கின்றேன் என்று செபிக்கின்றார், மனித வாழ்வு, பிரியாவிடை சொல்வதற்கு கற்றுத் தருகிறது என்று கூறிய திருத்தந்தை, இதனைக் கற்றுக்கொள்வதற்கு ஆண்டவர் நமக்கு அருள் வழங்குவாராக என்று சொல்லி, மறையுரையை நிறைவு செய்தார்.

உலகெங்கும், திருத்தந்தையின் பிரதிநிதிகளாகப் பணியாற்றும், திருப்பீடத்தூதர்களுக்கென, ஜூன் 12, வத்திக்கானில் துவங்கிய நான்கு நாள் கூட்டம், நிறைவுற்றது. இதில் கலந்துகொண்ட நூற்றுக்கும் அதிகமான திருப்பீடத் தூதர்கள் எல்லாரும், திருத்தந்தையுடன் சேர்ந்து, இக்கூட்டுத்திருப்பலியை நிறைவேற்றினர்.



சர்வமத சகவாழ்வுக்கான முழுநாள் கருத்தமர்வு ஒன்று சர்வோதய தலைமையகத்தில் அண்மையில் நடைபெற்றது. அனைத்து மதங்களைச் சேர்ந்த மதத்தலைவர்கள் பங்கேற்ற இவ் அமர்வில் சமகாலத்தில் மதங்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தி நல்லுறவைக் கட்டியெழுப்பும் செயற்திட்டங்கள் வகுக்கப்பட்டன. யாழ் மறை மாவட்டத்தின் சார்பில் அருட்பணி எஸ். ஏ. றொஷான் அடிகளாரும் எஸ். அஜந்தன் அடிகளாரும் பங்கேற்றனர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2019ம் ஆண்டு ஆனி மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.